## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

01.01.2019 கன்னிமரியாள் இறைவனின் தாய் பெருவிழா - திருப்பலி 02
03.01.2019 புனித குரியாக்கோஸ் எலியாஸ் சவேரா - திருப்பலி 03
06.01.2019 ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழா - திருப்பலி 04
13.01.2019 ஆண்டவரின் திருமுழுக்கு பெருவிழா - திருப்பலி 06
15.01.2019 பொங்கல் விழா - திருப்பலி 07
16.01.2019 புனித ஜோசப் வாஸ் மறைப்பணியாளர் - திருப்பலி 08
20.01.2019 பொதுக்காலம் 2ம் ஞாயிறு - திருப்பலி 09
22.01.2019 அருளாளர் லவுரா விக்குனா - திருப்பலி 10
24.01.2019 புனித பிரான்சிஸ் சலேசியார் - திருப்பலி 11
25.01.2019 திருத்தூதர் பவுல் மனமாற்றம் விழா - திருப்பலி 13
26.01.2019 இந்திய குடியரசு நாள் - திருப்பலி 14
26.01.2019 புனித திமொத்தேயு, தீத்து - திருப்பலி 15
27.01.2019 பொதுக்காலம் 3ஆம் ஞாயிறு - திருப்பலி 16
31.01.2019 புனித ஜான்போஸ்கோ திருவிழா - திருப்பலி 17

## பகுதி 2: விசுவாசத்தில் வளர...

1. திருஅவையின் பார்வையில் பொங்கல் விழா 19
2. அருளாளர் புரோனிஸ்லாஸ் மார்க்கிவிக்ஸின் வாழ்வு - தரும் பாடம் 21
3. புத்தாண்டில் புதிதாய் பிறப்போம் 23
4. திருச்சபை செய்திகள் 27

# பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

## 01.01.2019 கன்னிமரியாள் இறைவனின் தாய் பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

I. எண். 6: 22-27 II. கலா. 4: 4: 7 லூக். 2: 16-21

இறையேசுவில் நம்பிக்கையுள்ள இறைமக்களே, ஆண்டின் முதல் நாளாம் இந்நாளில் இறைவனின் சந்நிதானத்தைத் தேடி, இறையருளை வேண்டி இனிதே துவங்கும் இவ்வாண்டு நம் அனைவருக்கும் அருள் தரும் ஆண்டாய் அமைவதாக.

புத்தாண்டின் முதல் நாளை நமது தாய்த்திருஅவை அன்னை மரியாளின் பெருவிழாவோடு துவங்குகின்றது. இவ்விழா திருஅவையின் மட்டில் அன்னை மரியாளின் உயரிய கரிசனையை, பங்கை வெளிப்படுத்துகின்றது. "கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும் திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார்" (கலா 4:4) என்ற திருத்தூதர் புனித பவுல் அடிகளாரின் கூற்றினை நோக்கும்போது "இறைவனின் தாய் மரியா" என்ற மையக்கருத்தை மக்களுக்கு போதிக்க அப்போஸ்தலர் முன் வருவதை நாம் காண முடிகிறது. இதுவே அன்னை மரியாவின் முதல் பணியும் கூட. மூவுலக அரசி, மற்றும் செபிக்கும் மரியா என்பது அன்னைக்கு கிடைத்த இரண்டாம், மற்றும் மூன்றாம் கொடை என்பதை யோவான், தனது திருவெளிப்பாடு புத்தகத்தில் குறிப்பிடுகிறார். திருத்தூதர்கள் தங்கள் போதனைகளில் மரியாவைத் தாயாகவும், அரசியாகவும், நமக்காக இறைவனிடம் பரிந்து பேசும் அன்னையாகவும் மையப்படுத்தி போதித்ததன் மூலம் இன்றும் மரியா அவ்வாறே சித்தரிக்கப்படுகிறார். இடைவிடாமல் தம் பிள்ளைகள் நமக்காக இறைவனிடம் பரிந்து பேசும் தாயாக திகழ்கின்றாள்.

இன்றைய இறைவார்த்தை வழிபாடு புதிய ஆண்டில் இறைவன் நமக்கு அளிக்க விரும்பும் ஆசியை எடுத்தியம்புகிறது. குருக்கள் இறை மக்களுக்கு எவ்விதம் ஆசி வழங்க வேண்டும் என்பதை கற்றுத்தருகிறார். இறைவன் உனக்கு ஆசி வழங்கி உன்னை காப்பாராக, தம் திருமுகத்தை உன்மீது ஒளிரச்செய்து உனக்கு அருள் பொழிவாராக, தம் திருமுகத்தை உன் பக்கம் திருப்பி உனக்கு அமைதி அருள்வாராக என நிறைவான நிலையான ஆசியை வழங்குகின்றார். புத்தாண்டை புதிய நேர்மறை சிந்தனைகளோடு, இறைவனின் துணையை நம்பி, அன்னை மரியாளின் பரிந்துரையில் அடியெடுத்து வைப்போம். இவ்வுலகம் எல்லா மக்களும் மகிழ்ந்து வாழும் சிங்கார வனமாகவும், நம் குடும்பங்கள் ஒவ்வொன்றும் இயேசுவை மையப்படுத்தி, அவரையே நம்பி வாழும் குடும்பங்களாகவும் வாழ, வளர இறையருள் வேண்டி இத்தெய்வீக பலியில் பங்குகொள்வோம். ஒருவர் மற்றவருக்காக செபிப்போம். புனித கன்னிமரியாள் இறைவனின் தாய் நமக்காக என்றும் பரிந்து பேசுவாராக.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், பொதுநிலையினர் அனைவரையும் கடந்த ஆண்டு முழுவதும் வழிநடத்திய இரக்கத்திற்காக நன்றி கூறுவதோடு இப்புதிய ஆண்டில் இவர்கள் அனைவரும் உமது தூய ஆவியின் வரங்களாலும், கனிவிரக்கத்தாலும் வழிநடத்தப்பட வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.
2. உலகின் ஒளியாய் உதித்த இறைவா, உலக நாடுகள் அமைதியில் தழைக்கவும், நாட்டுத்தலைவர்கள் தற்பெறுமை, ஆணவம் போன்ற குணங்களை தவிர்த்து தாழ்ச்சியும், எளிமையும், தியாகமனமும் கொண்டவர்களாக வாழும் வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.
3. வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா, அன்னை மரியாவின் விழாவினை சிறப்பிக்கும் நாங்கள், அன்னை மரியாவைப் போலவே இறைவனின் திட்டங்களை உணர்ந்து, எங்களையே முழுமையாக இறைத்திருவுளத்திற்கு ஒப்புக்கொடுத்து இறையன்பில் வளர வரம்பெற வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பே உருவான இறைவா, சமுதாயத்தில் பாதுகாப்பின்றி வாழும் ஏழை, அநாதை, புலம்பெயர்ந்த, நலிவுற்ற மக்கள் அனைவரின் ஆக்கமுள்ள எதிர்பார்ப்புக்கள், திட்டங்கள் அனைத்தும் உமது அலாதி அன்பில் நிறைவேற வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

## 03.01.2019 புனித குரியாக்கோஸ் எலியாஸ் சவேரா திருப்பலி

### முன்னுரை

திருமதி. ராணிசம்பந்தன்

I. எசா. 61: 1-3 II. 1கொரி. 9: 16-19, 22-23 மாற்கு 16: 15-20

இறையேசுவில் இனியோரே, இன்றைய தினம் நமது திருஅவை புனித குரியாக்கோஸ் எலியாஸ் சவேரா என்ற புனிதரின் நினைவு நாளை சிறப்பிக்க நாம் ஒன்று கூடியுள்ளோம். நமது புனிதர் கேரள மாநிலத்தில் கைகைரி என்னும் இடத்தில் மேரி சவேரா, குரியாக்கோஸ் இவர்களுக்கு 1805ம் ஆண்டு பிப்ரவரி 10ம் நாள் பிறந்தார். இவர் 1829, நவம்பர் 29ம் நாள் தனது 24 வயதில் குருப்பட்டம் பெற்றவர். "மானானம்" என்ற இடத்தில் தேவாலயமும், ஆசிரமும் கட்டி ஒரு சபையைத் தொடங்கி, அதற்கு "அமலோற்பவ மாதாவின் கார்மேல் சபை" என்று பெயரிட்டார். இதற்காக அவர் அதிகமாக முயற்சியெடுக்க வேண்டியிருந்தது. கல்விக்காக பெரும்பணி ஆற்றியவர். இவர் நிறுவிய முதல் கத்தோலிக்க அச்சகமும், அனாதை குழந்தைகளுக்கும், முதியவர்களுக்கும், கைவிடப்பட்டவர்களுக்கான கருணை இல்லம் இன்றுவரை "உபவிசாலா" என்ற பெயரில் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது.

ஒவ்வொரு பங்குத் தளங்களிலும் ஒரு கல்வி கூடம் இருப்பது அவசியம் என்று செயலாற்றியவர். கேரளாவில் முதன் முதலில் மருத்துவக்

கல்லூரியை ஏற்படுத்தியவர். துறவற சபைகளின் பொது ஒழுங்குகளையும், கோட்பாடுகளையும் பெரிதும் மதித்த இவர் அதன்படி செயல்பட்டவர். இந்திய வம்சாவழியின் முதல் புனிதரான இவர் தனது 66ம் வயதில் 03.01.1984ல் இறைவனிடம் அடைக்கலம் புகுந்தார். 1984 ஏப்ரல் 4ம் நாள் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் இவரை புனிதர் நிலைக்கு உயர்த்தினார். இந்தியாவில் கத்தோலிக்க திருஅவை வேரூன்றி வளரவும், அதற்கு தேவையான துறவிகளை இந்தியாவில் உருவாக்கவும், அரும்பாடுபட்டவர் நமது புனிதர் குரியாகோஸ் எலியா சவேரா. இவரின் நற்செயல்களை சிந்தித்த வண்ணமாய் நாம் இத்திருப்பலியில் அவருக்காகவும் நாமும் அவரின் வாழ்வைப் பின்பற்றி வாழ தேவையான வரங்களை நமக்கு அளித்தருள வேண்டுமென்று இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. கிறிஸ்து அரசரே, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரும் புனித குரியாகோஸை போல பின்தங்கிய நாடுகளுக்கு இயேசுவை அளிக்கும் பணியில் சிறந்து விளங்க உமதருளைப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. சமத்துவத்தின் நாயகனே இறைவா, மனிதத்தின் ஏற்றத் தாழ்வுகளை களைந்து சாதி, மொழி, நிறம் இவைகளை கடந்து எல்லா நன்மைகளும் எல்லோருக்கும் கிடைக்கும்படி செயலாற்றல் மிக்க பொறுப்பாளர்களை எம் தேசத்திற்கு வழங்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. நம்பிக்கையின் இறைவா, கருணை இல்லங்களை அமைத்து முதியோருக்கும், அனாதைகளுக்கும் புனித குரியகோஸ் உதவியது போன்று எம் நாட்டில் இயங்கிவரும் முதியோர், அனாதை இல்லங்களுக்கு உமது அருளால் பொருளுதவியும், அருளாசீரும் நிறைவாக கிடைக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 06.01.2019 ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. D.V.R. ராஜா

*I.* எசா. 60:1-6 *II.* எபே.3: 2-3, 5-6 மத். 2: 1-12

குழந்தை இயேசுவில் நம்பிக்கையுள்ள இறைமக்களே, கிறிஸ்து இயேசு பாலனாய் யூதேயாவில் ஞானிகளுக்கு வெளிப்படுத்தப்பட்டார். அவர்கள் பாலனை தரிசித்த நாளை நமது திருஅவை இன்று திருக்காட்சி பெருவிழாவாகக் கொண்டாடுகிறது. யூதேயாவிலுள்ள பெத்லகேமிலிருந்தே அரசர்களுக்கெல்லாம் அரசரான மெசியா தோன்றுவார் என்று இறைவாக்கினர் எசாயா அறிவித்ததை முதல் வாசகத்தில் காண்கிறோம். இன்றைய திருப்பாடல் ஆண்டவரே எல்லா இனத்தவரும் உமக்கு ஊழியம் செய்வார்களாக என்று பாடுகின்றது. இரண்டாம் வாசகத்தில் பிறந்த இயேசு கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல புறவினத்தார்க்கும் உலகமாந்தர்

அனைவருக்குமே அவர் மெசியா, என்று அவருக்கு அருளப்பட்ட வெளிப்பாட்டை புனித பவுல் அறிவிக்கிறார். நற்செய்தியில் மூன்று ஞானிகள் பாலன் இயேசுவை கண்டு எல்லையில்லா மகிழ்ச்சியடைந்து, பொன்னையும் வெள்ளை போளத்தையும்,சாம்பிராணியையும் காணிக்கையாக சமர்ப்பித்து நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினர்.

பொன் அரசருக்கும், வெள்ளைப் போளம் மனிதருக்கும், சாம்பிராணி கடவுளுக்கும் அடையாளமாக கருதப்படுகிறது. இறைவன் ஒரு குறிப்பிட்ட குலத்திற்கு மட்டும் மீட்பு அளிக்க இசையவில்லை. மாறாக பூமியில் தோன்றும் எல்லா மக்களும் சாதி, இனம், மொழி, நாடுகளைக் கடந்து இறைதிட்டத்திற்குள் வரவேண்டும் என்பது திருவுளமாகின்றது. கீழ்த்திசை ஞானிகளின் வருகை இந்த பேராவலை எடுத்தியம்புகின்றது. இவர்களே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் இயேசு என்னும் ஒளியை நோக்கி பயணித்தனர்.

எனவே பாலன் மெசியா உலக மீட்பர் என்பதை உணர்ந்து நாமும் குழந்தை உள்ளத்தோடு இறைவனுக்கு ஏற்புடையவர்களாய் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாடுகள் களைந்து இறைவன் அருளும் மீட்பை பெற்றிட பாலன் இயேசுவிடம் வேண்டுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. **திருஅவைக்காக:** அன்பு இறைவா, எமது திருதந்தையின் உடல் உள்ள நலனைப் பாதுகாத்து அவர்தம் பணிகளையும், நிர்வாகத்தையும், மேம்படுத்தி, அமைதியின் தூதுவராக என்றும் விளங்கிடவும், மக்களை இறைவனில் இணைக்கும் பாலமாக விளங்கிட அருள்புரியுமாறு பாலன் இயேசு வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

2. **நாட்டுக்காக:** அன்பு இறைவா, எமது தேசத்தில் மக்கள் அமைதியுடன் வாழ வன்முறைகளை, களைந்து நலிந்தோர் உயர்வு காணவும், ஏழை மக்களின் பொருளாதாரம் உயரவும் பிறந்துள்ள பாலன் இயேசு வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. **மக்களுக்காக:** அன்பு தந்தையே இறைவா, எமது மக்கள் மெசியாவின், வழிகளையும் வார்த்தைகளையும் உள்ளத்தில் இருத்தி இறைவனுக்கு ஏற்புடையவர்களாய் வாழவும், நோய், கடன், பொருளாதார இன்னல்களிலிருந்து விடுபட்டு விசுவாசத்தில் உறுதியடைந்து வாழ அருள்புரியுமாறு பாலன் இயேசு வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

4. மீட்பளிக்கும் இறைவா, உமது திருக்காட்சி வழியாக மீட்பு அனைவருக்கும் உரியது என்பதை அறிவுறுத்துகின்றீர். உம்மை ஏற்றுக்கொள்ளாத மக்களின் உள்ளத்தில் உமது அருளைப்பொழிந்து நீரே கடவுள் என்பதை புரிந்து கொள்ளும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 13.01.2019 ஆண்டவரின் திருமுழுக்கு பெருவிழா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

I. எசா. 40: 1-5,9-11 II. தீத்து 2: 11-14, 3: 4-7 லூக். 3: 15-16, 21-22

அன்பார்ந்தவர்களே, ஆண்டவரின் திருமுழுக்குப் பெருவிழாவைக் கொண்டாட தாயாம் திருஅவை இன்று நம்மை அழைக்கின்றது. "ஆதாமை முன்னிட்டு அனைவரும் சாவுக்குள்ளானதுபோல்...(1கொரி. 15:22) ஒரே மனிதன் வழியாய்ப் பாவம் இந்த உலகில் நுழைந்தது. அந்தப் பாவத்தின் வழியாய் சாவு வந்தது. எல்லா மனிதரும் பாவம் செய்வதால் எல்லா மனிதரையும் சாவு கவ்விக்கொண்டது" (உரோ. 5:12). இதனால் தொடக்கநிலைப் பாவம் (ஜென்மப் பாவம்) அனைவரையும் தீண்டியது என்று பவுலடியார் குறிப்பிடுகிறார். அருட்சாதனங்களுக்கெல்லாம் நுழைவாயிலாக இருப்பது திருமுழுக்கு. இதனால் நாம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாகவும், அரச குருத்துவ திருக்கூட்டமாகவும், இறைவனுக்குச் சொந்தமான மக்களாகவும் மாறுகிறோம் (1பேதுரு 2: 9). தொடக்கநிலை பாவத்தைக் கழுவி, நம்மை கடவுளின் பிள்ளைகளாக்கி, விசுவாசிகளின் நம்பிக்கைக்குரிய கூட்டத்தில் சேர்த்து, ஒரே திருஅவையின் மக்களாக்குகின்றது.

இயேசு யோர்தான் நதியில் திருமுழுக்குப் பெற்றதும், தூய ஆவியார் புறா வடிவில் தோன்றி அவர்மீது இறங்கினார். அப்பொழுது "என் அன்பார்ந்த மகன் நீரே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்று வானத்திலிருந்து தந்தையாம் இறைவன் மகிழ்ந்து கூறினார். நம் ஆண்டவர் இயேசு தாமே முன்மாதிரியாய் நின்று திருமுழுக்கின் மாட்சியை நமக்கு அறிவிக்கின்றார். இவ்வாறே திருமுழுக்குப் பெற்ற நம் ஒவ்வொருவரின் மனமாற்றத்தினாலும் நம் தந்தையாகிய இறைவன் அக்களித்துப் பூரிப்படைய வேண்டும். அத்தகைய மனமாற்றத்தை நாம் உருவாக்க வேண்டும். திருமுழுக்கின் வழியாக நமக்கு அளித்த கொடைகளையும், அழைப்பையும், கடமைகளையும் என்றும் உணர்ந்து வாழ வரம்வேண்டி பக்தியுடன் இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தூய ஆவியால் திருமுழுக்கு கொடுத்த இறைவா, எம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வழிகாட்டுதலில் கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர் அனைவரும் பொதுநிலையினர் அனைவருக்கும் திருமுழுக்கின் மேன்மையை உணரச் செய்து, இறைப்பணியை திறம்படச் செயல்படுத்தத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. இறைவார்த்தையை கடைபிடிப்போர் பேறுபெற்றோர் என தெளிவாக்கிய இறைவா, திருமுழுக்குப் பெறும் குழந்தைகளுக்கு பெற்றோரும், ஞானப்பெற்றோரும், திருஅவையின் போதனையின் விசுவாசத்திலும்,

ஞானத்திலும் இறைவனுக்கு உகந்த பிள்ளைகளாக வளர்க்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா, விண்ணையும் மண்ணையும் படைத்து அவற்றையெல்லாம் ஆளும் உரிமையை எங்களுக்களித்த மேன்மையை உணர்ந்து நாடு அமைதியில் களிப்புற எம் நாட்டுத்தலைவர்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. மாட்சியின் மன்னரே இறைவா, உணவின்றித் தவிக்கும் ஏழை, எளியோரின் நலனில் அக்கறையின்றி வாழும் அனைவரும் மனந்திரும்பி, எல்லாரும் இன்புற்று வாழ பிறர் நல ஆசையை உறுதி செய்ய உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 15.01.2019 பொங்கல் விழா திருப்பலி

**முன்னுரை** டே. ஆக்னல் ஜோஸ்

அன்பார்ந்த இறைமக்களே, தமிழர்களாகிய நாம் இன்று அறுவடைத் திருநாளான பொங்கல் விழாவைக் கொண்டாடி மகிழ்கிறோம். மனிதருக்கு உணவு வழங்கும் இயற்கைக்கு நன்றி செலுத்துகின்ற விழாவாக நமது தமிழ் மரபு இதை சிறப்பிக்கிறது. ஆம், இது ஒரு நன்றியின் விழா. இறைவனுக்கும், இயற்கைக்கும், உழவனுக்கும், உயிரனங்களுக்கும் நன்றி சொல்லும் விழாவாக இந்நாள் அமைகின்றது.

சிறப்பாக, இன்றைய வாசகங்கள் யூதர்களின் அறுவடை விழாவான பெந்தக்கோஸ்து விழாவின் சிறப்பு பற்றியும், அப்போஸ்தலர்களின் காலத்தில் திருத்தூதர்கள்மீது இறங்கி வந்த தூய ஆவியார் நிகழ்வையும் சிந்திக்கிறது. கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை, இயற்கையை நமக்கு சாதகமாக மாற்றித் தரும் எல்லாம் வல்ல கடவுளுக்கு நன்றி செலுத்துகின்ற விழா. தமிழ் நாட்டில் விவசாயம் சிறக்கவும், பாசன நீருக்கு பாதகமான பல்வேறு சூழ்நிலைகள் பெருகவும், நமது மண்ணில் விவசாயத்தைக் காத்து வரும் உழவர்கள் வாழ்வு மேம்படவும், அவர்களது தொழில் மேம்படவும் இன்றையத் திருப்பலியில் சிறப்பாக மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா, உலக மக்களுக்கு வாழ்வளிக்கும் உணவாகிய உம் திருமகனை வழங்க நீர் தேர்ந்துகொண்ட எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், தங்கள் அழைப்பின் மேன்மையை உணர்ந்து, இயேசுவின் சாட்சிகளாக வாழும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. உணவளித்து காப்பவரே இறைவா, அறுவடை விழாவாகிய பொங்கல் திருநாளைக் கொண்டாடும் தமிழக மக்கள் அனைவரும் இயற்கைக்கு நன்றி செலுத்துவதோடு, வாழும் உண்மை கடவுளாகிய உம்மை

முழுமையாக அறிந்து, உமக்கு நன்றியுள்ளவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. இயற்கையின் அதிபதியே இறைவா, இயற்கை விளைவித்தப் பேரிடராலும் காலநிலை மாறுபாட்டாலும் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்ற டெல்டா தமிழக மக்களை கருணையுடன் கண்ணோக்கி, தங்களது துன்பத்திலிருந்து விடுபட்டு மீண்டும் விவசாயத்தில் வளர்ச்சியும் மகிழ்ச்சியும் காண உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

4. மனிதகுல மீட்பரே இறைவா, இன்று அறுவடைத் திருநாளைக் கொண்டாடும் தமிழக கிறிஸ்தவர்கள்மீது தூய ஆவியைப் பொழிந்து, எங்களை உமது நற்செய்தியின் கருவிகளாக மாற்றுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 16.01.2019 புனித ஜோசப் வாஸ் மறைப்பணியாளர் திருப்பலி

**முன்னுரை**

திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இறையேசுவின் அன்புக்குரிய சகோதரிகளே, சகோதரர்களே, இன்று திருஅவையானது அருளாளர் ஜோசப் வாஸ் திருவிழாவைக் கொண்டாடுகிறது. "சிலோன் திருத்தூதர் எனப்படும் இவர் 1651 ஏப்ரல் 21 அன்று பிறந்தார். கோவாவில் இயேசுசபைக் கல்லூரியில் படித்து 1676ல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். அடுத்த ஆண்டே "நான் அன்னை மரியாவின் அடிமை" என்று தன்னை அறிவித்தார். இலங்கையில் கிறிஸ்தவ மக்கள் குருவானவர் இல்லாமல் இன்னலுறுவதைக் கேள்விப்பட்டு 1686ல் இலங்கைக்குச் சென்று குருவாக பணியாற்றினார். 1690ல் கண்டி மாவட்டத்தில் உள்ள புத்தளம் என்ற இடத்தில் 50 ஆண்டுகளாக குருவானவர் இல்லாமல் இருப்பதைக் கண்டு 1692ம் ஆண்டு கண்டியை மறைப்பணித்தளமாகக் கொண்டு பணியைத் தொடர்ந்தார்.

1696ம் ஆண்டு கொடிய வறட்சி நிலவியது. எனவே புத்த துறவிகளை அழைத்து செபம் நடத்தினார்கள். மழை ஒரு துளிக்கூட விழவில்லை. ஜோசப் வாஸ் அழைக்கப்பட்டார். இவர் செபித்துக்கொண்டிருந்த பொழுது மழைப் பெய்யத் தொடங்கியது. இவர் செபித்துக்கொண்டிருந்த இடமும் அவ்வூர் மக்களும் மழையில் நனையாமல் இருந்தார்கள். இதைக்கண்ட டச்சுக்காரர்கள் இவருக்கு இலங்கையில் மறைப்பணி செய்ய அனுமதி வழங்கினார்கள். இவரது உடல் நலம் குன்றியபோது ஒன்பது நாள் ஆன்மீகப் பயிற்சியை ஆரம்பித்தார். ஏழாம் நாளே 1711 ஜனவரி 16ம் நாள் இறைவனடி இணைந்தார். திருத்தந்தை பிரான்சிஸ் ஜனவரி 14, 2015ல் புனிதர் நிலைக்கு உயர்த்தினார். அருளாளர் ஜோசப் வாஸ் இறைவனின் நற்செய்திப்பணியை இறைவனின் துணையோடு பணியாற்ற ஆட்சியாளர்களை மனமாற்றம் செய்ததைப்போல நாமும் நற்செய்திப்பணியாற்ற திருப்பலியில் இணைந்து மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அரசர்களுக்கெல்லாம் அரசரே எம் இறைவா, உமது மகிமை இப்பூவுலகம் முழுவதும் பரவிட உழைக்கும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் உம் அன்பில் என்றும் பாதுகாத்து வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. எல்லாம் வல்ல இறைவா, உமது திருவுளப்படி எம் நாட்டுத் தலைவர்கள் செயல்பட்டு அதன் மூலம் எமது நாட்டில் அமைதி, ஒற்றுமை, உயர்வு ஆகியவைகள் சிறந்து விளங்கிட அருள்தர வேண்டுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
3. உண்மையின் ஒளிவிளக்கே இறைவா, உமது இறையாட்சியின் பணியை இம்மண்ணுலகில் அருளாளர் ஜோசப் வாஸ் சிறப்பாக செய்திட்டதைப்போல், இறையாட்சியின் பணிசெய்திட குருக்கள் பற்றாக்குறை இருப்பதால் எம் இளையோருக்கு தேவஅழைத்தல் வரம் தந்திட அருள்தர வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 20.01.2019 பொதுக்காலம் 2ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

*I.* எசா. 62: 1-5 *II.* 1கொரி. 12: 4-11 யோவா. 2: 1-12

இறையேசுவில் பிரியமுள்ள இறைமக்களே, கிறிஸ்துவின் அன்பில் நனைய உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். இன்றைய திருப்பலியின் மையக்கருத்து, இறைவன் நமக்கு கொடுத்திருக்கும் கொடைகள் அனைத்தும் நம் சுயநலத்துக்காக அல்ல, பொதுநலத்திற்கே பயன்பட வேண்டும் என்று அறிவுறுத்துகிறது. இன்றைய முதல் வாசகத்தில் இறைவன் நம்மை ஆசீர்வதிப்பதாகவும், நமக்கு வரும் துன்பங்கள், இடையூறுகள், பிரச்சனைகள் அனைத்திற்கும் வெற்றி தருவதாகவும் வாக்குறுதி அளித்து நம்மை உயர்த்துவதாகவும், இரண்டாம் வாசகத்தில் தூய ஆவியின் வழியாக இறைவன் நமக்குத் தருகின்ற வரங்கள் அனைத்தும் நம் சுயநலத்திற்காக பயன்படுத்தாமல், உலகிலுள்ள அனைவரும் பயன்படும் விதத்தில் அவ்வரங்களை கையாளவேண்டும் என்றும் கூறுகிறது. இறுதியாக இன்றைய நற்செய்தியில் இறைமகன் இயேசு தனது புதுமை செய்யும் கொடையை தனக்காக பயன்படுத்தாமல் துன்பத்தில், பிரச்சனையில் வாழும் அந்த கானாவூர் திருமணத் தம்பதியருக்கே தண்ணீரை இரசமாக மாற்றி இன்பமளிக்கின்றார் என்பதனை நற்செய்தியில் நாம் காண்கிறோம்.

இயேசுவின் வருகை உலகுக்கு அன்பு, அமைதி, மன்னிப்பு, இரக்கம், மீட்பு இவற்றைக் கொண்டு வந்தது. இவற்றைத் தேடிச் செல்பவர்களை இறைவன் ஒருபோதும் கைவிடமாட்டார். இயேசுவை நம் வாழ்க்கைக்குள் கூட்டிச் செல்வோம். இயேசு வந்தால் நிச்சயம் நம் வாழ்க்கையில் ஒரு மாற்றம் ஏற்படும். இயேசுவின் வருகையால்தான் கானாவூர் திருமணத்தில்

துன்பம் இன்பமாக மாறியது. இன்றைய நற்செய்தி வாசகத்தில், இயேசு தன் அன்புத் தாயின் பரிந்துரையால் சாதாரணத் தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றி மகிழ்ச்சி நிறைந்தோடச் செய்கிறார். எனவே இத்திருப்பலியில் துன்பச்சூழல் மறைந்து நல்லதொரு மகிழ்ச்சி நிறைந்த வாழ்வு மலர இறைவனை மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. விண்ணகத் தந்தையே, உமது அடியார்களாகிய திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்களை இவ்வுலக தீய நாட்டங்களிலிருந்தும் பொல்லாரின் சூழ்ச்சிகளிலிருந்தும் உமது தூய ஆவியாரின் துணைக்கொண்டு காத்தருளும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கம் நிறைந்த தந்தையே, எம் வாலிபப் பிள்ளைகளை மனம் போன போக்கில் செல்லாது உமது தூய ஆவியாரின் கொடைகளான ஞானம், சொல்வளம், நம்பிக்கை, குணப்படுத்துதல் போன்ற அருள் கொடைகளால் நிரப்பி உமக்குகந்த ஊழியராக மாற்றும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. கருணையின் கடலே எம் இறைவா, அன்று கானாவூர் திருமணத்தில் ஏற்பட்ட குறைகளை போக்கி மகிழ்ச்சியை கொடுத்தவரே, இன்று எங்கள் குடும்பங்களிலுள்ள குறைகளை நீக்கி மகிழ்வைத்தரும்படி உம்மை மன்றாடுகிறோம்.
4. இரக்கத்தின் தந்தையே, நாட்டில் நிலவும் கொலை, கொள்ளை, வழிப்பறி, கொடிய நோய்கள், இயற்கையின் சீற்றம் போன்றவற்றால் துன்பப்படும் உமது மக்களை உம் திருக்கரத்தால் காத்தருளும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 22.01.2019 அருளாளர் லவுரா விகூஞா திருப்பலி

**முன்னுரை** சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்

லவுரா கார்மென் விகூஞா, சிலே நாட்டிலுள்ள சந்தியாகோ என்னுமிடத்தில் 1891ம் ஆண்டு பிறந்தார். லவுராவின் தாய் தன் இரு பிள்ளைகளையும் காப்பாற்றுவதற்காக சொந்த ஊரை விட்டு அர்ஜென்டினாவிற்கு குழந்தைகளுடன் சென்றார். 1900ம் ஆண்டில் சிறுமி லவுரா சலேசிய சபை கன்னியர்களால் நடத்தப்படும் பள்ளியில் சேர்ந்தாள். அதே ஆண்டில் முதல் முறையாக இயேசுவை தன் இதயத்தில் பெற்றபொழுது தூய தோமினிக் சாவியோவைப்போல் "இறைவனை என் முழு உள்ளத்தோடு அன்பு செய்வேன், ஒறுத்தல் முயற்சிகளைச் செய்வேன், கடவுளுக்கு எதிராக தீமை செய்வதைவிட சாவேன், அடிக்கடி ஒப்புரவு அருட்சாதனங்களைப்பெற்று தேவ நற்கருணை உட்கொள்வேன்", என்னும் தீர்மானங்களை எடுத்துக்கொண்டாள்.

தன் தாய் நெறிதவறிச் செல்கிறார் என்பதை அறிந்த லவுரா, தன்

தாயின் மனமாற்றத்திற்காக தன்னையே இறைவனுக்கு அர்ப்பணித்தாள். தன் ஆன்ம குருவின் ஆலோசனைப்படி தான் செய்த ஒறுத்தல் முயற்சிகளை அதிகரித்தாள். இதனால் அவள் உடல் வலுவிழந்தது. இறப்பதற்கு முந்திய நாள் தன் தாயை நோக்கி, "அம்மா உங்களை மீண்டும் கடவுளிடம் சேர்க்க விரும்பி என்னையே இயேசுவுக்கு அர்ப்பணித்து விட்டேன். நான் இறப்பதற்கு முன் நீங்கள் கடவுளோடு இணைந்து விட்டீர்கள் என்னும் மகிழ்ச்சியை எனக்குத் தாருங்கள்" என்றாள். 1904ம் ஆண்டு சனவரி 22ம் நாள் தன் தாய் மனம் மாறிய மகிழ்ச்சியோடு லவுரா உயிர் நீத்தாள். அர்ஜென்டினாவில், பாஹியா பிலாங்கா என்னுமிடத்தில் உள்ள சகாய அன்னையின் புதல்வியர் சபை சிற்றாலயத்தில் லவுராவின் உடல் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர், லவுராவின் பனித்துளி போன்ற தூய்மை, அன்பு, தியாகம், தவற்றை எதிர்க்கும் மனத்துணிவு ஆகியவற்றைப் போற்றி 1988-ம் ஆண்டு செப்டம்பர் 3-ம் நாள் அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். அவரின் புனிதத்துவத்தை போற்றுவோம், தூய்மை, கற்பு என்ற வரம் வேண்டி திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் தங்களது மறைப்பரப்புப் பணியிலே இளைஞர், இளம் பெண்களுக்கு கிறிஸ்துவ நம்பிக்கை, மகிழ்ச்சி, பிறரன்பு, சேவை, அறநெறி வாழ்வு ஆகியவற்றின் சிறந்த மதிப்பீடுகளை எடுத்துரைக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. இளைஞர் இளம்பெண்கள் இறைவார்த்தையின் வலிமையினால் கிறிஸ்துவின் உயிர்தரும் பிரசன்னத்தில் நிலைத்திருந்து, தங்களையே சமுதாயத்திற்கு அர்ப்பணிப்பதன் மூலம் சுதந்திரம், நீதி, அமைதி, ஆகியவற்றைப் பெற்று அனுபவிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. இங்கு கூடியுள்ள நாங்கள் புனிதமானதும், நற்கனி தருவதும், தியாகமானதுமாகிய திருத்தூது வாழ்வை வாழ அழைக்கின்ற இறைத்தந்தையின் திருவுளத்திற்கேற்ப உண்மையுள்ளவர்களாக வாழ, இந்த நற்கருணைப் பகிர்வு வலிமையூட்ட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 24.01.2019 புனித பிரான்சிஸ் சலேசியார் திருப்பலி

**முன்னுரை** சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்

பிரான்சிஸ் 1567ம் ஆண்டு சவாய் என்ற இடத்தில் பிறந்தார். இவர் பாரீஸ் நகரில் தத்துவம், இறையியல் படிப்பையும், பதுவாவில் சமூகம் மற்றும் திருஅவைச் சட்டங்களையும் பயின்று முனைவர் பட்டம் பெற்றார். குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட பின் ஷப்லே நகரத்தில் வாழ்ந்த கால்வினியர்கள் என்னும் பிரிவினைச் சகோதரர்களை மீண்டும் கத்தோலிக்கர்களாக மனமாற்றும் பணியில் ஈடுபட தன்னுடைய ஆயரிடம் தன்னையே

அர்ப்பணித்தார். அனசியில் தங்கி ஜெனிவா மறைமாவட்டத்தின் ஆயராக பணியாற்றியபோது திரிதெந்து திருச்சங்கத்தின் சீர்த்திருத்தங்களை எடுத்துரைத்து நடை முறைப்படுத்தினார். தனது வாழ்வில் பெருந்தன்மையும், பகுத்தறிவும், கடவுளின் செயல்பாட்டினை உணரும் திறனும் கொண்டிருந்ததால், அனைவரும் ஆன்மீகத்தில் வாழ வழிகாட்டினார். "ஆன்ம வாழ்வின் சாரம் கடவுளை அன்பு செய்வதே" என்று எடுத்துச் சொல்லி, துறவு வாழ்வை அனைவருக்கும் உரித்தாக்கினார். அச்சுத்துறையின் முக்கியத்துவத்தை புரிந்தவராய், தோனோன் என்ற இடத்தில் அறிஞர்களின் கலைக்குழுவை நிறுவி, அவர்கள் அறிவியலில் ஆராய்ச்சி செய்யவும், இளைஞர்கள் நல்வாழ்வு வாழவும் பயிற்சி அளித்தார். தூய ஜேன் தி ஷன்டால் துணையோடு "சந்திப்புச் சபையை" *(Order of the Visitation)* ஏற்படுத்தி வழி நடத்தினார். 1622ம் ஆண்டு டிசம்பர் 28ம் நாள் லியோன்ஸ் என்ற இடத்தில் விண்ணக வாழ்வை அடைந்தார். இவரது உடலை 1623ம் ஆண்டு சனவரி 24ம் நாள் அனேசிக்கு மாற்றியதால், அந்நாளையே அவருடைய திருவிழாவாக அன்னையாம் திருஅவை கொண்டாடுகிறது.

திருத்தந்தை பதினோராம் பத்திநாதர், இவரை 1665ம் ஆண்டு புனிதர் நிலைக்கு உயர்த்தினார். அதன் பின்னர் இவர் 1877ம் ஆண்டு திருஅவையின் சட்ட வல்லுநராகவும், 1923ம் ஆண்டு கத்தோலிக்க இதழாசிரியர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் பாதுகாவலராகவும் பிரகடனப்படுத்தப்பட்டார். புனித பிரான்சிஸ்கு சலேசியாரின் வாழ்விலிருந்து தனது பணிக்குத் தேவையான அன்பு, இரக்கம் மனித நேயத்தின் உள்ளுயிர்ப்பு ஆகியவற்றை புனித ஜான் போஸ்கோ கற்றுணர்ந்தார். தாம் நிறுவிய சலேசிய சபையின் முதன்மைப் பாதுகாவலராக இவரைத் தேர்ந்தெடுத்து, இவர் பெயரையே தம் சபைக்கு சூட்டினார். நாமும் இத்திருப்பலியில் புனித சலேசியாரின் பண்முக திறமையை இறைவனிடம் வேண்டுவோம். குறிப்பாக இறையழைத்தலுக்காக இறைவனிடம் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லா கிறிஸ்தவ மக்களையும், குறிப்பாக குடும்பத்தின்மீது அக்கறையற்றவர்களையும், விசுவாசமற்றவர்களையும், நம்பிக்கை இழந்தவர்களையும் ஒன்றிணைத்து விசுவாசத்திலும் அன்பிலும் ஒன்றுப்பட்டு சான்று பகரும் ஒரு கிறிஸ்தவ சமுதாயத்தை உருவாக்க, ஆர்வமும், பொறுமையும் எம் திருத்தந்தைக்கும், ஆயர்களுக்கும், குருக்களுக்கும் தந்திட வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. எழுத்தாளர்கள் தங்கள் பணியில், உலக நிகழ்வுகளை, நற்செய்திக் கண்ணோட்டத்துடன் பார்த்து, பண்பட்ட முழுமனிதனை உருவாக்க, வரம்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. சலேசிய குடும்பத்தினர், தங்கள் அன்றாட வாழ்வில் புனித பிரான்சிஸ்கு சலேசியாரை எடுத்துக்காட்டாகக் கொண்டு, அவரது போதனைகளை ஏற்று பிறரன்புப் பாதையில் நடக்க வரம்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. புனித பிரான்சிஸ்கு சலேசியாரைக் கண்டு பாவித்து இறையரசின் தேவைகளுக்காக நாங்களனைவரும் நீர் தந்துள்ள நற்கொடைகளின் கனிகளை கையளிக்க வரம்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 25.01.2019 திருத்தூதர் பவுல் மனமாற்றம் விழா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

I. தி.ப. 22: 3-16 (அ) II. தி.ப. 9: 1-22 மாற்கு 16: 15-18

இறையேசுவில் நிறையன்புள்ளவர்களே, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவரையும் இன்றைய திருவழிபாட்டிற்கு அன்போடு வரவேற்கின்றோம். இன்றைய திருவழிபாடானது திருத்தூதரான தூய பவுலின் மனமாற்றத்தை நமக்கு எடுத்துக் கூறுகிறது. திருஅவையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக இருந்த இருதூண்களில் ஒன்றாக புனித பவுல் அடிகளாரின் மனமாற்றத்தை ஏற்படுத்திய நாளை இன்று நாம் சிறப்பிக்கின்றோம். ஒரு சாதாரண வாழ்க்கை வாழ்ந்து வந்த புனித பவுலை ஒரு சரித்திர வாழ்க்கை வாழ அழைத்த நாள். கிறிஸ்துவை சந்தித்தப்பின் தன் வாழ்வு முழுமையும் இயேசுவுக்காக அர்ப்பணித்தவராய் "வாழ்வது நானல்ல என்னில் கிறிஸ்துவே வாழ்கிறார்" என்று கூறும் அளவிற்கு மனநிலையில் மாற்றம் பெற்றவர். உண்மையான மனமாற்றம் என்பது அன்றாட வாழ்வில் மாற்றத்தை கொண்டுவரும், மாற்றம் இருக்குமிடத்தில் முன்னேற்றம் இருக்கும் என்பதற்கு சிறந்த சான்றாக விளங்கினார். எனவே, தூய பவுல் சென்ற மனமாற்றத்தின் பாதையில் நாமும் பயணம் செய்து, மாற்றத்தில் ஏற்றம் காண்பவர்களாய், இறையாட்சியின் மக்களாய் திகழ இத்திருவழிபாட்டில் பக்தியுடன் பங்கு பெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயின் கருவில் உன்னை தேர்ந்தேன் என்ற இறைவா, எம் திருஅவையின் திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவறத்தார் அனைவரையும் தேர்ந்துள்ளீர் உம் இறையாட்சி அமைக்க. திருத்தூதர் பவுலைப்போல ஒவ்வொருவரும் திருஅவை புத்துயிர் பெற்று, புதுப்பொலிவடைந்து பிரகாசிக்க உழைக்க வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. இறையாட்சியை அறிவிப்போரின் மலரடிகள் எத்தனை அருமையானவை என வர்ணித்த இறைவா, திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் தாம் பெற்ற வரம், கொடைகளுக்கு ஏற்ப தாமும் வாழ்ந்து பிறரையும் வாழ வைத்து அழகு பார்க்க வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. மாற்றத்தை விரும்பின இறைவா, இருளும், வெறுமையும் நிறைந்த உலகை மாற்ற திருத்தூதர் பவுலை இருளிலிருந்து ஒளிக்கு அழைத்து உம் திருவுளத்தை நிறைவேற்றினீர். இதேப்போன்று இன்றுள்ள உலகின் சூழலும், சாட்சிய வாழ்வாக அமைய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பின் இலக்கணமே எம் இறைவா, எங்கள் வாழ்வில் நாங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயல்களும் உமது நன்மைக்காகவே செய்திடவும், அதனால் பலரும் பலனடைய போதுமான நல்ல ஞானத்தையும், அறிவையும் எங்களுக்குத் தந்து ஆசீர்வதித்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 26.01.2019 இந்திய குடியரசு நாள் — திருப்பலி

**முன்னுரை**

திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

*I.* எரே. 31: 31-34 *II.* திமொ.2: 1-6 யோவா.8: 31-36

இயேசு கிறிஸ்துவில் பிரியமான சகோதரிகளே, சகோதரர்களே, இன்று நாம் அனைவரும் திருஅவையாக இணைந்து நம் நாட்டின் குடியரசு நாளைக்கொண்டாடி மகிழ அழைக்கப்பட்டிருக்கிறோம். 1950ம் ஆண்டு ஜனவரி 26ம் நாள் புதிய அரசவையில் அமைப்புச் சட்டங்களுடன் இந்தியா தன்னை ஒரு குடியரசு நாடாக அறிவித்தது. உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு என்னும் பெருமை நம் இந்திய நாட்டுக்கே உண்டு. ஏறத்தாழ 350 ஆண்டுகள் அந்நிய ஆட்சியில் கட்டுண்டு கிடந்த நாடு, ஜனநாயகத்திற்கும், குடியாட்சித்துவத்திற்கும் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது.

இன்று இந்தியா பெற்றுள்ள வளர்ச்சி எல்லாத் தரப்பினரும் மகிழக்கூடிய அளவில் இல்லாமல் வசதி படைத்த மக்களின் வளர்ச்சியாகவே விளங்குகிறது. இந்த நிலை மாற இறைவனிடம் மன்றாடுவோம். "ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்" (நீமொ.1:7) என்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்து "தெய்வ பயம்" உள்ளவர்களாக வாழ மன்றாடுவோம். இன்றைய நற்செய்தியில் "உண்மை உங்களுக்கு விடுதலை" அளிக்கும் (யோவான் 8: 32) என்று இயேசு கூறுகிறார். பிறரை அன்பு செய்வதில்தான் உண்மையான விடுதலை கிடைக்கும். இந்த விடுதலையை அளிப்பவர் இறைவன் ஒருவரே. ஆதலினால் உண்மைச்சுதந்திரத்திற்காக இறைவனிடம் மன்றாடுவோம். வேற்றுமை அகற்றி, ஒற்றுமை, ஒருமைப்பாட்டை வளர்க்கும் கொடைகள் அனைத்தும் நம் நாட்டுத்தலைவர்களுக்கு இறைவன் தர இந்த குடியரசு நாள் திருப்பலியில் சிறப்பாக மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. **வி**ண்ணுலக அரசரே எம் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் உம்

அன்புக்கட்டளையின்படி ஒருவரையொருவர் அன்பு செய்து வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்த இறைவா, இன்று எம் தாய் திருநாடு குடியரசு தினவிழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. இன்றைய நாளில் எம்மை ஆட்சிசெய்யும் எம் தலைவர்கள் "தெய்வ பக்தி" உள்ளவர்களாகவும், பிறரன்புப்பணி செய்யும் தலைவர்களாகவும் மாற உம் அருளை வழங்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. சுகம்தரும் இறைவா, உடல் நலமின்றி வாழும் சகோதர சகோதரிகள் உம் வருகையால் நலமும் வளமும் பெற்று மனநிறைவும் மகிழ்ச்சியும் பெற்று வாழ்ந்திடத் தேவையான அருளைத்தந்திட உம்மை மன்றாடுகிறோம்.
4. விடுதலையின் நாயகரே எம் இறைவா, இன்றைய நாளில் நோயினாலும், கடன் தொல்லையினாலும், குடும்பங்களில் பிரச்சனைகளாலும் தவித்துக்கொண்டிருக்கும் ஒவ்வொருவரையும் உமது பாதத்தில் சமர்ப்பிக்கின்றோம். இவர்களின் தேவைகளையும் பிரச்சனைகளையும் களைந்து வாழ்வில் முழுமையான சுதந்திரத்தை அனுபவிக்கும் ஆற்றலைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 26.01.2019 புனித திமொத்தேயு, தீத்து திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவில் பிரியமான இனிய மக்களே, இன்று நம் திருஅவை புனித திமொத்தேயு, தீத்து இவர்களின் நினைவு நாளைச் சிறப்பிக்கின்றது. முதலில் நாம் புனிதர் திமொத்தேயுவைப்பற்றி அறிந்துக்கொள்வோம். லிஸ்திரா நகரின் கிறிஸ்தவ விசுவாசியான யூதகுல பெண்மணி யூனீஸ் என்பவருக்கும், கிரேக்க தந்தைக்கும் பிறந்தவர் புனித திமொத்தேயு. லிஸ்திரா நகரில் புனித சின்னப்பர் போதித்து கொண்டிருந்தபோது அவரோடு இணைந்தவர் தூய ஆவியாரின்மீது மிகவும் பற்றும் உறுதியும் கொண்டவர். தொடக்க கால கிறிஸ்தவர்களிடையே நற்செய்தி பணியாளராக பணி செய்தபோது புனித சின்னப்பரால் எபேசியஸ் நகர ஆயராக நியமிக்கப்பட்டார். "திமொத்தேயு" என்கிற பெயருக்கு "கடவுளின் மாட்சிமை" என்பது பொருள். வயிறு, குடல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு பாதுகாவலராக இருப்பவர். புனித சின்னப்பரின் 2வது பயணத்தின்போது சீலாவுடன் இருந்தவர். கி.பி. 97ல் வேத கலாபனையின்போது கல்லெறியப்பட்டு வீதிகளில் இழுத்தடிக்கப்பட்டு வேதசாட்சியாக மரித்தவர்.

**புனித தீத்து:** "கிரீஸ்" நகரில் "கிரீட்" என்னும் ஊரில் கி.பி. 13ம் ஆண்டு பிறந்தவர். "கிரீட்" நகரின் பாதுகாவலர் என பெயர் பெற்றவர். புனித சின்னப்பர் இவரைப்பற்றிக் கூறும்போது "எனது உண்மையான குழந்தை, நம்முடைய பாரம்பரிய நம்பிக்கை என்பார். புனித சின்னப்பரின் தோழரும், சீடருமாக இருந்தவர். புனித சின்னப்பரின் திருமுகங்களில் பல இடங்களில் இடம் பெற்றவர். புற இனத்தவரான புனித தீத்துவை

புனித சின்னப்பர் "கிரீட்" நகரின் ஆயராக்கினார். பின் இவரை கொரிந்து நகருக்கு அனுப்பி அங்குள்ள திருஅவையை சீர்த்திருத்தும்படி கூறினார். அந்த வேலை வெற்றிகரமாக செய்து முடித்தார் புனித தீத்து. பின் ஒருவித காய்ச்சலில் உயிர் நீத்தார். திருஅவைக்காக பல காலம் பணி செய்த இவர்களைப்போல நாமும் விசுவாசமுடன் திருஅவையை காப்போம் என்ற சிந்தனையோடு திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நற்செய்தியின் நாயகனே இறைவா, எங்கள் திருஅவையின் தலைவர் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் யாவரும் நற்செய்தியின் மதிப்பீடுகளை உணர்ந்து, தெளிந்து பிறருக்கு அறிவிக்கும் பணியில் முழுமையாக நிலைக்கும் வரத்தை அளிக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பின் ஊற்றே இறைவா, அரசியல் மோகம், ஜாதி, மதவெறி, பொருளாசை என்று தலைவர்கள் அலைந்து திரியாமல் மனிதநேயம், பிறரன்பு என்ற உமது மதிப்பீடுகளை மனதில்கொண்டு மக்கள் பணிபுரிய நல்மனதினை தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. நம்பிக்கையின் நங்கூரமே இறைவா, குடும்பங்களில் ஏற்படும் இடர்பாடுகள், பிரச்சினைகள், கருத்து வேற்றுமைகள் இவைகளால் வரும் மனப்போராட்டங்களால் உம்மை மறந்து விடும் நிலையை மாற்றி நம்பிக்கையின் பற்றுறுதி உம்மில் நிலைத்திருக்க வரமருள புனித திமொத்தேயு, புனித தீத்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 27.01.2019 பொதுக்காலம் 3ஆம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் சுரேஷ்

*I.* நெகே. 8: 2-4,5-6, 8-10 *II.* 1கொரி. 12:12-30 லூக்.1: 1-4, 4: 14-21

இறையன்பின் திருக்குலமே இன்று நாம் பொதுக்காலம் மூன்றாம் ஞாயிறைச் சிறப்பிக்கின்றோம். இன்றைய வாசகத்தில், கண், கைகளைப் பார்த்து, நீ எனக்கு தேவையில்லை என்றோ, தலை கால்களைப் பார்த்து நீங்கள் எனக்குத் தேவையில்லை என்றோ சொல்ல முடியாது. ஏனெனில் மற்ற உறுப்புகளை ஒதுக்கிவிட்டு உடல் தனித்து செயல்பட முடியாது. ஏனெனில் உடலில் மிக வலுவற்றனவாய்த் தோன்றும் உறுப்புகளே மிகவும் தேவையானவையாய் இருக்கின்றன. ஒரு உறுப்பு துன்புற்றால் அதனுடன் மற்ற எல்லா உறுப்புகளும் சேர்ந்து துன்புறும். ஓர் உறுப்பு பெருமை பெற்றால் மற்ற எல்லா உறுப்புகளும் சேர்ந்து பெருமை பெறும். அதுபோல் நாமும் நம் கண்முன் கடவுளின் மக்கள் துன்பப்படும்போது ஒதுங்கிபோகாது, அவர்களோடு சேர்ந்து துன்பத்தில் பங்குபெறவும், இவர்கள் இன்புறும்போது அவர்களோடு சேர்ந்து இன்புற வேண்டியும் புனித பவுலடியார் நமக்கு அழைப்பு விடுக்கிறார். நற்செய்தியில் இயேசு கலிலேயாவில் தொழுகை

கூடத்தில் கற்பித்தபோது அவர் நமக்கு ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை பெறவும், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்யவும் வேண்டி நமக்கு எடுத்துரைக்கிறார். இதன் மூலம் நாமும் நற்செய்தியை கடைபிடித்து கடவுளுக்கு ஏற்ற பிள்ளைகளாய் ஒருமனதோடு ஊழியம் புரியவும் வேண்டி அனைவரும் இத்திருப்பலியில் பக்தியோடு பங்கேற்போம், இறையருள் பெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அனைத்திற்கும் அனைத்துமான இறைவா, எம் தாயாம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் யாவரும் நற்செய்தியின் மதிப்பீடுகளை விதைகளாக கொண்டு உலகெங்கும் இறையாட்சியின் விழுமியங்களை விதைத்திட செய்யும் கருவிகளாகத் திகழ்ந்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. அரசர்களுக்கெல்லாம் அரசரே எம் இறைவா, நாட்டையாளும் அரசியல் தலைவர்கள் அனைவரும் நாட்டின் முன்னேற்றத்தில், தன்னலம் துறந்து பிறர் நலனில் அக்கறைக்கொண்டு நல்லாட்சி புரிந்திடவும், ஏற்றத்தாழ்வுகளை களைந்து சமத்துவம், சகோதரத்துவம் மரலச் செய்யும் சிறந்த தலைவர்களாக திகழ்ந்திடவும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. இறை இரக்கத்தின் ஆண்டவரே, உமது அளவில்லாத அன்பு பெருக்காலும், இரக்கத்தினாலும் உலகெங்கும் உள்ள ஏழைகள், அனாதைகள், கைவிடப்பட்டோர், மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் உமது நிறைவின் அருளை பொழிந்து காத்திடவும், அவர்கள் தங்கள் வாழ்வில் மகிழ்ந்திருக்கவும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. அனைத்திற்கும் புகலிடமான தந்தையே, எம் குழந்தைகளுக்கு நல்ல ஞானத்தையும், இளையோருக்கு நல்ல வழிகாட்டுதலையும், முதியோர்க்கு நல்ல பாதுகாப்பையும், தம்பதியரிடையே நல்ல பிரமாணிக்கத்தையும் கொடுத்து உமது நிறைவாழ்வில் பங்கேற்க தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 31.01.2019 புனித ஜான்போஸ்கோ திருவிழா திருப்பலி

**முன்னுரை** சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்

ஜான் போஸ்கோ 1815ம் ஆண்டு ஆகஸ்டு 16ம் நாள் இத்தாலியில், பெக்கி என்னும் சிற்றூரில் பிறந்தார். தனது தாயிடமிருந்து இறை நம்பிக்கையையும், நற்செய்தி மதிப்பீடுகளையும் கற்றுக் கொண்ட இவர் தனது 9ம் வயதில் தான் கண்ட கனவு வழியாக, இளைஞர்களுக்குக் கல்வி கற்பிக்க, தனது வாழ்வை அர்ப்பணித்தார். தான் சிறுவனாக இருக்கும்போது தனது நண்பர்களை மகிழ்விக்க விளையாட்டுகளையும்

கடவுளோடு உறவாட செபங்களையும் கற்றுக் கொடுத்து, முன்மாதிரியாக விளங்கினார். "ஆன்மாக்கள் மட்டும் போதும், வேறேதும் வேண்டாம்" (Give me souls and Take away the rest) என்ற விருதுவாக்குடன் 1841ம் ஆண்டு குருப்பட்டம் பெற்று, தனது வாழ்வையே ஏழை எளிய இளைஞர்களுக்கு அர்ப்பணித்தார். அவர்களுக்காக "ஆரட்டரி" (Oratory) தொடங்கி, புனித பிரான்சிஸ்கு சலேசியாரை தனது இளைஞர் பணிக்கு பாதுகாவலராகத் தேர்ந்தெடுத்தார்.

பகுத்தறிவு, (Reason) இறையுணர்வு, (Religion) கனிவன்பு (Loving Kindness) ஆகியவற்றைக் கொண்ட அன்புமுறைக் கல்வி வழியாக (Preventive System) வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்று அனைவருக்கும் கற்றுக் கொடுத்தார். கிறிஸ்துவோடு உறவாடுதல், சக மாணவர்களை ஏற்றுக்கொள்ளுதல், நம்பிக்கையில் நிலைத்திருத்தல், அருளடையாளங்களில் பங்கெடுத்தல் ஆகியவற்றைப் பற்றி இளைஞர்களுக்கு எடுத்துக் கூறினார். இவரது வழிகாட்டுதலாலும், போதனையாலும் பலர் புனித நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளனர். கடவுள்மீது கொண்டிருந்த பற்றுறுதியும், சகாயத் தாயின் மீது கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கையும் இவரது அயராத உழைப்பிற்கு உறுதுணையாக இருந்தன. "சலேசியர்கள், தன்னடக்கத்துடன் வாழ்ந்து, இளைஞர் பணிக்காக தங்களையே முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளும்போது, எந்த துன்பம் வந்தாலும் அஞ்சத் தேவையில்லை" எனக்கூறி அதனை வாழ்ந்தும் காட்டினார்.

புனித ஜான் போஸ்கோ, சலேசிய சபையையும் புனித மரிய மசரெல்லோவுடன் இணைந்து சகாய அன்னையின் புதல்வியர் சபையையும், சலேசிய உடன் உழைப்பாளர் இயக்கத்தையும் தோற்றுவித்தார். திருத்தந்தை 11ம் பத்திநாதர் இவரை புனிதர் நிலைக்கு உயர்த்தினார். இவரது மறைவின் முதல் நூற்றாண்டை நினைவுகூறும்போது, திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவருக்கு "இளைஞர்களின் தந்தையும் ஆசிரியரும்" (Father and Teacher of Youth) என்ற சிறப்புப் பட்டத்தை அளித்தார். இப்புனிதரை நமக்கு வழிகாட்டியாக கொள்வோம். இவரின் நற்குணங்களை இறைவன் நமக்கும் அருள வேண்டுமென்று இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

**பதில்:** விண்ணகத் தந்தையே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

1. நன்மையே உருவான இறைவா, திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் தங்களுடைய அழைப்பிற்கேற்ப சான்று பகர்ந்து, நற்செய்தியை மகிழ்ச்சியுடனும், தாராள உள்ளத்துடனும் எடுத்துரைக்கத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பு நிறைந்த இறைவா, உலக மக்கள் அனைவரும் நல்ல மனம்

கொண்டு, சமுதாயத்தின் மேன்மைக்காக, தன்னலமற்ற தாராள உள்ளத்தோடு, உழைக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தந்தையே இறைவா, கைவிடப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, குறிக்கோளற்ற இளையோர் புனித ஜான்போஸ்கோவின் ஒவ்வொரு வழித்தோன்றல்களிலும், ஒரு நண்பரைக் கண்டடைய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. நலமெல்லாம் நல்கிடும் இறைவா, இளைஞர்களின் கிறிஸ்துவப் போதனையில் ஈடுபட்டுள்ளோர் தங்களுடைய பாதுகாவலராகிய புனித ஜான் போஸ்கோவில், தகுந்ததோர் வழிகாட்டியையும், ஆசிரியரையும் அவர்கள் கண்டு தம் திருத்தூதுப் பணியில், ஆர்வமுடன் ஈடுபட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி - 2: விசுவாசத்தில் வளர...

## திருஅவையின் பார்வையில் பொங்கல் விழா

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

யூதர்கள் யூதேயா நாட்டைச் சேர்ந்த உறுப்பினர் ஆவார். யூதேயா நாட்டை விட்டு உலகின் பல பாகங்களுக்குச் சிதறிச் சென்ற காலத்தும் இப்பெயராலேயே அழைக்கப்பட்டனர். அவர்கள்தான் இறைவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள், இறைவனால் அழைக்கப்பட்டவர்கள். இவர்களால் உலகமும் ஆசீர்வதிக்கப்படும் என்று எண்ணப்பட்டவர்கள். யூத சமயத்தின் மூலமாக உலகிற்கு விடுதலை உண்டு என்ற நம்பிக்கை பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நிலவியது. இறைவாக்கினர் இதனை உறுதி செய்தனர். இந்த இறைவார்த்தைகள் புதிய ஏற்பாட்டின் மூலமாகவும் நிறைவேறியது. இஸ்ரயேல் சமய வாழ்வில் பண்டிகைகளும், பலிகளும் சிறப்பிடம் பெறுகின்றன. பண்டிகைகள் மூலமாக இறைவன் தங்களிடம் நெருங்கி வரவேண்டும் என்ற ஆர்வத்துடன் கொண்டாடுவர்.

ஓய்வு நாள், பாஸ்கா பண்டிகையும், புளியாத அப்பப் பண்டிகையும், பெந்தகோஸ்தே என்னும் அறுவடைப் பண்டிகை, கூடாரப் பண்டிகை எக்காளம் ஊதும் பண்டிகை, பாவ விடுதலைப் பண்டிகை (லேவி. 23) பூரீம் பண்டிகை (எஸ்தர் 9) ஆகும். ஆம் பெந்தகோஸ்தே பண்டிகை இஸ்ரயேல் மக்களால் கொண்டாடப்பட்டது. இவ்விழாவானது கோதுமை அறுவடையின் விழாவாகவும், ஆண்டின் இறுதியில் சேகரிப்பு விழாவாகவும் கொண்டாடப்பட்டது (விப. 34:22). "வயலில் நீ விதைத்து உன் உழைப்பின் முதல் பலன் கிட்டும்போது அறுவடை விழாவும் , ஆண்டின் தொடக்கத்தில் வயலிலிருந்து உன் உழைப்பின் பலனை ஒன்று சேர்க்கையில் சேகரிப்பு விழாவும் கொண்டாட வேண்டும்" (விப. 23:16). நீங்கள் வாழும் இடங்களிலிருந்து இருபதுபடி அளவுள்ள ஒரு மரக்கால் மிருதுவான மாவில் பத்தில் ஒரு பங்கு எடுத்து புளிப்பேற்றி இரண்டு அப்பங்களைச் சுட்டு அவற்றை ஆண்டவருக்கு முதல் பலியின் ஆரத்திப் பலியாகக் கொண்டு

வாருங்கள் (லேவி. 23: 15-17). கூடாரப் பண்டிகையும் இப்படியே ஏழு நாட்கள் விழா கொண்டாடு. ஏனெனில் உன் கடவுளாகிய ஆண்டவர் உன் நிலத்தின் விளைச்சலுக்கும் நீ மேற்கொள்ளும் செயல்கள் அனைத்திற்கும் ஆசி வழங்குவார். அப்பொழுது நீ நிறைவாய் மகிழ்ச்சியுறுவாய் (இச. 16: 13-15).

இஸ்ரயேல் மக்கள் இப்படித்தான் இறைவனுக்கு நன்றி கூறி அறுவடைப் பண்டிகையைக் கொண்டாடினர். இஸ்ரயேலரின் அறுவடைப் பெருவிழாவைப் போன்று தமிழினத்தின் கொண்டாட்டத்தை தமிழக ஆயர் சபை, 2ம் வத்திக்கான் சங்கம் திரித்தெந்து சங்கம் இவைகளின் ***(Sacro Santum Conselium No: 36; Gaudium et Spes No: 33)*** அடிப்படையில் அங்கீகாரம் அளித்துள்ளது. வீரமாமுனிவர், அருளானந்தர், ஜீ.யு. போப் போன்றோர் தமிழுக்கும் தமிழ் கலாச்சார உடைகளுக்கும் மாறியதால்தான் பலரையும் கிறிஸ்துவின்பால் ஈர்க்க முடிந்தது. "பிற சமயங்களில் காணக்கிடக்கின்ற உண்மையானதும், தூய்மையானதுமான எதையுமே கத்தோலிக்கத் திருஅவை வெறுத்து ஒதுக்குவதில்லை. பிற சமயங்கள் தங்களுடைய கொள்கைகளிலிருந்தும், போதனைகளிலிருந்தும் பலவற்றில் மாறுபடினும், எல்லா மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளிச்சுடரை மீண்டும் மீண்டும் பிரதிபலிக்கின்ற செயல்முறை பாணிகள், வாழ்க்கை முறைகள், நெறிகள், கோட்பாடுகள் ஆகியவற்றைக் கத்தோலிக்கத் திருஅவை உண்மையாகவே மதித்துப் போற்றுகின்றது" என்று "நோங்த்ரா ஏத்தாத்தே" ***Nostra Aetate*** (கிறிஸ்தவமல்லாச் சமயங்களோடு திருச்சபைக்குள்ள உறவு) என்ற அறிக்கை எண் 2) கூறுகிறது.

பிற மதங்களின் நன்னெறிகளையும், சமூகப் பண்பாட்டு விழுமியங்களையும் ஏற்று மதிக்க அழைப்பது, அவற்றை ஏற்று விசுவசிக்கும் அழைப்பு அல்ல. பல்சமய உரையாடல், மத நல்லிணக்கத்தை உருவாக்கத்தானேயொழிய, "எம்மதமும் சம்மதம்" என்று கூற அல்ல. இதன் அடிப்படையில்தான் தமிழர் திருநாளாம், பெருநாளாம் பொங்கல் விழாவும் நம் கத்தோலிக்கக் கிறிஸ்துவர்களால் கொண்டாடப்படுகிறது. "தை பிறந்தால் வழிபிறக்கும்" என்பது முன்னோர் மொழியாகும். இதன்படி தமிழர்களின் தனித் தன்மையைக் காத்து வருவதில் பொங்கல் விழா முக்கியப் பங்கு வகிக்கிறது. பழையன கழிந்து, புதியன புகு என "போகிப் பொங்கலையும்" விவசாயம் செய்து உழைப்பில் உயரியவர்கள் தமிழர் என்பதை உலகிற்கு அறிவிக்கவும், எல்லாம்வல்ல பரம்பொருளுக்கு நன்றி செலுத்தவும் தைப் பொங்கலின் முதல் நாளையும் கொண்டாடுகிறான். தனக்காக உழைக்கும் கால்நடைகளை நன்றியோடு போற்ற "மாட்டுப்பொங்கலைக்" கொண்டாடுகிறான், அவற்றின் வலிமையை ஜல்லிக்கட்டுக் காளைகளில் கண்டு மகிழ்கின்றான். உற்றாரையும் உறவினரையும் கண்டு மகிழ" காணும் பொங்கலை நான்காம் நாள் கொண்டாடி மகிழ்கின்றனர். இவ்வாறு தமிழ்ப்புத்தாண்டு தொடக்கத்திலேயே அதுவும் காலையிலேயே நீராடி, புத்தாடை உடுத்தி, புது மஞ்சள், புதுப்பானை, கரும்பு, புது அரிசியில்

பொங்கலிட்டு கதிரவனை கைக்கூப்பிப் தொழுது நன்றி தெரிவித்து கொண்டாடுவதே இந்தப் பொங்கல் திருநாள்.

கத்தோலிக்கர்களாகிய நாமும், அன்றைய நாளில் திருப்பலி நிகழ்த்திவிட்டு அனைவருமாய் நமக்குள் இருக்கும் விருப்பு வெறுப்புகளை மறந்து, மதம், இனம் கடந்து புதுப்பானை, புது மஞ்சள், புது அரிசி, கரும்பு இவைகளை வைத்து கோயிலுக்கு வெளியில் பொங்கலிட்டு இறைவனுக்கு நன்றி செலுத்தி, தமிழர் கலாச்சாரத்தை பறைசாற்றுகிறோம். விவிலியம் காட்டும் இஸ்ரயேல் மக்கள் கொண்டாடிய அறுவடைப் பெருவிழாவைப்போன்று, இன்று திருஅவை நமக்குக்காட்டும் தமிழ் கலாச்சார விழாவாம் பொங்கல் விழாவைக் கொண்டாடுவோம். தங்கள் உழைப்பால் உலகை வாழவைக்கும் உழவர் பெருமக்களுக்கு நன்றி செலுத்துவோம். இயல்பாய் கிடைக்கும் இயற்கைக்கு இடைஞ்சல் செய்யாமல் இருப்போம். நாம் வாழ இயற்கையை அழித்தது இறந்த காலமாகட்டும். இயற்கை வாழ வழி செய்வோம். இனிவரும் சந்ததி இனிமைக்காணச் செய்வோம். உழவனின் வயிறும் மனமும் நிறைய எதிர்காலத்தில் ஏற்றமாய் செய்வோம். நாளும் பொங்கல் விழா என்றே மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கச் செய்வோம். திருஅவையோடு இணைந்து பொங்கல் விழாவைக் கொண்டாடி மகிழ்வோம்.

## அருளாளர் புரோனிஸ்லாஸ் மார்க்கிவிக்ஸின் வாழ்வு - தரும் பாடம்

திரு. ஜான் அலெக்ஸ்

**சமூக வாழ்வின் இரண்டு தூண்கள்:** அருளாளர் புரோனிஸ்லாஸ் தெற்கு போலந்து நாட்டில் 1842ல் பிறந்தவர். மிக ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர் என்பதால் மட்டுமல்ல இவர் கடைபிடித்த கிறித்துவ மதிப்பீடுகளால் உலகம் அவருக்கு கொடுத்த பரிசு பசி, சமூகத்தில் ஒடுக்கப்பட்டு, பள்ளியிலும் பல சோதனைகளை சமாளிக்க வேண்டிய கட்டாயமும்தான். ஆனால் இவ்வனைத்தையும் அவர் பொறுமையோடும் நம்பிக்கை தளராமலும் இருந்து 1867ல் குருவானவராக திருநிலைப்படுத்தப்பட்டார். சிறைச்சாலையில் உள்ளோருக்கு மறைக்கல்வி கற்பிப்பதிலும், ஏழை எளியவர்களோடு இருப்பதையும் விரும்பினார். இவரின் முன்மாதிரியை பின்பற்றி ஏழ்மையின் விலிம்பில் சிக்கித்தவித்த பல இளையோர், கல்வியிலும் தங்கள் ஆன்மாக்களை காப்பதிலும் அயராது உழைத்து முன்னேறினார்கள்.

**தொன் போஸ்கோவிடம் வந்தடைதல்:** தொன் போஸ்கோவின் இளையோர் அன்புமுறை மற்றும் ஆன்மீகத்தால் பெரிதும் ஈர்க்கப்பட்டதால் ஒரு சலேசியராக விரும்பி இத்தாலிக்கு சென்றார் புரோனிஸ்லாஸ். 1887ல் தொன் போஸ்கோவிடமே தனது நித்திய வார்த்தைப்பாட்டினை கொடுக்கும் பெருமையை பெற்றவர் 1892ல் சலேசியராக போலந்துக்கு கலிசியாவில் பங்கு தந்தையாக பொறுப்பேற்று ஏழை எளிய போலந்து இளையோரின் வாழ்வுக்காக தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்தார்.

**மிக்கேலைட்ஸ்:** தொன் போஸ்கோவின் வழிமுறைகள் அடிப்படையில், அவரோடு இன்னும் அதிகமாக பணியாற்றும் நோக்கில், "பணி மற்றும் தன்னடக்கம்" என்ற சங்கத்தை துவங்கினார் புரோனிஸ்லாஸ். இவர் 1912 ஜனவரி 29ல் மறைந்தார். தன்னுடைய மறைவுக்கு பின் 9 ஆண்டுகள் கழித்து, அச்சங்கத்தின் ஆண் மற்றும் பெண் உறுப்பினர்களை கொண்டு "தூய அதிதூதர் மைக்கேல்" பாதுகாவலில் புதிய இரு துறவற சபைகளை திருஅவை அங்கீகரித்தது. இவர்கள் மிக்கேலைட்ஸ் என்று அழைக்கப்பட்டனர். அருட்பணி புரோனிஸ்லாஸ், தொன் போஸ்கோவை போலவே தன்னுடைய சபையினருக்கு நற்கருணை, மரியன்னை மற்றும் அன்றாட வாழ்வில் தீயோனின் பிடியிலிருந்து விடுவிக்கிற காரணத்தால் அதிதூதரான மைக்கேல் மீதான பக்தியையும் ஏற்படுத்தினார். சிறந்த சிந்தனையாளர், உழைப்பையும் தன்னடக்கத்தையும் பெரிதும் போற்றி முன்மாதிரியாக வாழ்ந்தவரின் எண்ணங்களை இக்கட்டுரையின் வழியாக அவர் நமக்கு தரும் பாடமாகவும் அமையலாம்.

**ஊனியல்பு:** சமூக வாழ்வின் இரு தூண்களை மெல்ல அழித்துவிட்ட மனதர்களால் இன்று உலகம் தடுமாறி கொண்டு வருகிறது. கல்வியிலும் சரி நடைமுறை வாழ்விலும் சரி அவர்கள் "பணி மற்றும் தன்னடக்கம்" என்பதை ஒதுக்கி அறிவுசார் வழிமுறைகளிலும் விழிப்புணர்விலும் பொதுவாக அதிகம் கவலைப் படுகிறதை நாம் பார்க்கலாம். மற்றொரு புறம் நம்மை படைத்தவருக்கு நமது தேவை என்ன என்பது தெரிந்த காரணத்தால், இவ்வாறு எடுத்துரைக்கிறார், "நீ மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால் அதற்குத் திரும்பும் வரை நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உன் உணவை உண்பாய்" (தொ.நூ 3:19). இயேசு கிறிஸ்து தனது நற்செய்தியில், "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" என்கிறார். அதாவது, "துன்பத்தையும் உழைப்பையும் ஏற்றுக் கொள்வது என்பது, உங்களது மீட்பு தந்த எனக்கு மட்டுமல்ல, என் சீடர்களாகிய உங்களுக்கும் இது பொருந்தும். என்னோடு வான் வீட்டில் இருக்க நீங்கள் விரும்பினால், உங்களுடைய அறிவாற்றல், எண்ணம், செயல் அனைத்தும் கடவுளின் திட்டத்திற்கேற்ப ஒப்புக்கொடுக்கவும், துன்பத்தை ஏற்றுக்கொள்ளவும் வேண்டும்" என்பது பொருள்.

"ஊனியல்பின் இச்சை தூய ஆவிக்கு முரணானது. தூய ஆவியின் விருப்பம் ஊனியல்புக்கு முரணானது." என்ற கலாத்தியர் 5:17ல் சொல்லப்படுவதுபோல, நமது உடலின் உணர்வுகளை இறை விருப்பத்திற்கு ஏற்ப தொடர்ந்து செயல்படவும், இறுதி நாள் வரை கடவுளின் மாட்சிக்காக இரவு பகலும் போராடக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

**முழு மகிழ்ச்சியே வேண்டும்:** தற்போதைய வாழும் காலக்கட்டத்தில், உலகத்தார் அதிலும் (வருத்தத்துடன்) நம் கிறித்துவர்களிடமும் காணப்படுகிற ஒரு விஷயம், "இவ்வுலகில் உள்ள எல்லாவற்றையும் எந்த

தடங்களும் துன்பமும் இல்லாமல் அனுபவிக்க வேண்டும்” என்பதே. பணம், பதவி, ஓய்வு, கேளிக்கை கொண்டாட்டங்கள், புகழ் என்றெல்லாம் அனுதினமும் முழுமூச்சுடன் வாழ்வை நடத்திக் கொண்டிருக்க நினைக்கும் பல மனிதர்கள், ஏனோ நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைப்பதில் மட்டும் யோசிக்கிறார்கள் என்பது கவனிக்க வேண்டியதாகிறது. ஆகவே சமூக வாழ்வில் பணி மற்றும் தன்னடக்கம் பெரிதும் போற்றுதலுக்குரிய இரு தூண்களாகும். அங்குதான் பொதுநலன், ஆரோக்கியமான வாழ்வு, பலம், அமைதி, தனிமனித மதிப்பீடுகள் மற்றும் சுதந்திரமான சூழல் நமக்கு கிடைக்கிறது. இதைப் பற்றி எடுத்து சொல்வதோடில்லாமல், அவற்றை அன்றாட வாழ்வில் நடைமுறைக்கு கொண்டுவர முன்மாதிரியாக நாம் மாற வேண்டும். குறிப்பாக இளையோர் மத்தியில் இவ்விரு தூண்களைப் பற்றிய முக்கியத்துவத்தை நமது வாழ்வின் மூலம் அவர்கள் காணச் செய்வது நமது கடமையாகும். இதற்கு நமது பள்ளிகளில் சில பாடத்திட்டங்களை வகுக்கலாம். எண்ணற்ற மாணவர்கள் நம்மிடையே இருக்கிறார்கள். அவர்களின் வழியாக இவ்விரு தூண்களின் சிறப்பை உலகத்திற்கு எடுத்துக்கூற நம்மால் முடியும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

## புத்தாண்டில் புதிதாய் பிறப்போம்

டே. ஆக்னல் ஜோஸ்

அன்புடையீர், இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள். புத்தாண்டு என்பது ஒவ்வொரு ஆண்டின் துவக்கத்திலும் வருவது தான் என்றாலும் அந்நாளை சிறப்பாகக் கொண்டாடி வரவேற்பதில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான முறைகளைக் கையாள்வர் இளைஞர்களும் இளம் பெண்களும் புத்தாண்டு துவங்கும் அந்த இரவில் ஆட்டம் பாட்டத்தோடும் ஆரவாரத்தோடும் உற்சாகமாய் காணப்படுவர். நாற்பதைக் கடந்தவர்களும் ஐம்பதைக் கடந்தவர்களும் கூட இந்த உற்சாகத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு புத்தாண்டை வரவேற்பதை பல இடங்களிலும் காணலாம். இதற்கு முற்றும் மாறாக ஆன்மீகவாதிகளோ அந்த இரவில் ஆலய வழிபாடுகளில் மூழ்கி ஆண்டவனை ஆராதித்து புத்தாண்டை வரவேற்பர். அன்று பெரும்பாலான வீடுகளில் பெருத்த விருந்தும் பெரும் மகிழ்வுமாக இருக்கும். ஒரு சில குழுவினர் தங்களின் உறவுகளைச் சந்தித்து வாழ்த்து சொல்லி பெரியவர்களிடம் ஆசி பெறும் நாளாக இதைக் கொண்டாடுவர். குழந்தைகளும் பெரியவர்களும் புத்தாடை அணிந்து குதூகலிக்கும் நாட்களில் இதுவும் ஒன்றாகும்.

அன்றைய தினம் எல்லா பெரிய உணவு விடுதிகளும் விருந்தினர்களால் நிரம்பி வழியும் அலுவலகங்களில் பணிபுரியும் அதிகாரிகளில் பலர் அன்றைய தினம் தங்கள் அறைகளில் ஒரு மாற்றத்தை உண்டாக்கி புத்தாண்டை வரவேற்பர், இப்படி பல வழிகளிலும் புத்தாண்டு கொண்டாட்டங்கள் நடைபெறுவதை நாம் நன்கறிவோம். இவை யாவுமே நமது தனிப்பட்ட வாழ்விலோ அல்லது ஆன்மீக வாழ்விலோ

எந்த மாற்றங்களையும் கொண்டுவருவதில்லை ஒருநாள் கொண்டாட்டம் முடிந்தவுடன் மீண்டும் பழைய வாழ்வுக்கே சென்று விடுகின்றோம்.

ஆண்டவர் நம்மை இந்தப் புத்தாண்டில் புதிதாய் பிறக்க வேண்டும் என்று எதிர்ப்பார்க்கின்றார். ஆண்டு மட்டும் புதிதாய் பிறந்தால் போதாது. நாமும் புதிதாய் பிறந்தவர்களாக மாற வேண்டும் என்று விரும்புகின்றார், அதில்தான் உண்மையான மகிழ்ச்சி உள்ளது. ஆண்டவரது இந்த எதிர்பார்ப்பை சிந்தித்து துவங்கும் பொழுது கீழ்க்கண்ட மூன்று கேள்விகள் எழுகின்றன. ஆவை

1. புதிதாய் பிறப்பது என்றால் என்ன?
2. நாம் ஏன் புதிதாய் பிறக்க வேண்டும்?
3. நாம் புதிதாய் பிறப்பதால் என்ன நன்மை?

ஒவ்வொரு கேள்விக்கும் விடை காண முயல்வோமா?

**புதிதாய் பிறப்பது என்றால் என்ன?**

புதிதாய் பிறக்க வேண்டும் என்பதால் பழைய வாழ்வில் ஒருமாற்றம் தேவை என்பது விளங்கும் இத்தகைய புதுவாழ்வை, குறைகளற்ற நிறைவாழ்வை நமக்கு வழங்குவதற்காகத்தான் ஆண்டவராகிய இயேசு இவ்வுலகிற்கு வந்தார். குறைகளற்ற நிறைவான மனிதனைத்தான் கடவுள் படைத்தார். தன்னுடைய மகிமையின் சாயலை மனிதனுக்கு வழங்கி தெய்வ சாயலாகவே அவர்களைப் படைத்தார் (1:27). அந்த சூழலில் கடவுள் மனிதரோடு உரையாடினார், உறவாடினார். அவர்களோடு உலாவினார். மனிதனுக்கு எப்பொழுதுமே இருப்பதைவிட்டுவிட்டு பறப்பதின்மேல்தான் ஆசை இருக்கும். இதற்கு நமது முதல் பெற்றோரும் விதிவிலக்கல்ல. தாம் கொண்டிருந்த "கடவுளின் சாயல்" என்கிற உயர்நிலையை உணராதவர்களாய் "கடவுளைப்போல மாறவேண்டும்" என்கிற பொய்யான ஆசைக்கு இணங்கினார். விலக்கப்பட்ட கனியை உண்ண வேண்டாம் என்று கடவுள் கட்டளையிட்டதை அறிந்திருந்தும் தங்களது ஆசைக்கு அடிப்பணிந்தனர். ஆண்டவரின் கட்டளையை ஆசை மேற்கொண்டது. விளைவு "பாவத்திற்கு அடிமையாயினர்" இதன்மூலம் பிசாசுக்கு அடிமைகள் ஆயினர். பாவத்தின் சம்பளம் மரணம் (உரோ. 6:23) என்பதற்கிணங்க பாவமும், மரணமும் இன்றி படைக்கப்பட்ட மனித இனம் பாவம் செய்ததின் நிமித்தம் "நீ மண்ணிலிருந்து எடுக்கப்பட்டாய், ஆகையால் மண்ணுக்கே திரும்புவாய் (தொ.நூ. 3:19) என்று கடவுளால் சபிக்கப்பட்டது.

பிசாசின் பிடியிலிருந்தும் பாவத்தின் சாபத்திலிருந்தும் தன்னை விடுவித்துக்கொள்ள மனிதன் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஆனால் தன்னைவிட்டு விலகிச்சென்ற மனிதனை மீட்பதற்காக அவனுக்கு புதுவாழ்வு தருவதற்காக தன் ஒரே மகன் இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பினார். பிசாசின் ஆளுகையிலிருந்து ஆண்டவர் இயேசுவின்

ஆளுகைக்குள் நுழைவதே "புதிதாய் பிறப்பதாகும்" இது நம்மாலான செயல் அல்ல, மாறாக, ஆண்டவர் மனித இனத்தின்மீது கொண்டிருந்த நிலையான அன்பினிமித்தம் இப்புதிய வாழ்வை நமக்கு வழங்கினார்.

**நாம் ஏன் புதிதாய் பிறக்க வேண்டும்?**

படைய வாழ்வின் பாதிப்புகளை நன்கு அறிந்தால்தான் புதிதாய் பிறக்கவேண்டும் என்கிற எண்ணம் உண்டாகும். அப்படியானால் புதிதாய் பிறக்காத நிலையில் நமது வாழ்வு எவ்வாறு உள்ளது? நம்மை அடிமைப்படுத்தும் விதிகள் பலகொண்ட கடன் பத்திரத்தால் நம்மை சிறையாக்கி வைத்திருந்தான் பிசாசு (கொலோ. 2:14). இதன் நிமித்தமாக கடவுளுக்கும் நமக்குள்ள உறவு துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்தது. கடவுளைக்குறித்த அறியாமையில் நம்மை வழிநடத்தி அவரை உண்மையாய் ஆராதிக்கத் தெரியாதவர்களாக, ஜெபிக்கத் தெரியாதவர்களாக வைத்திருந்தான். கடவுளோடு நமக்குள்ள நிலையான வாழ்வைக்குறித்த அறிவை தெரிந்துக்கொள்ள முடியாதவாறு வைத்திருந்தான். உலகப் பொருட்களின்மீதும் பணத்தின்மீதும் நமக்குள்ள ஆசையைத் தூண்டிவிட்டு நம்மைத் தனக்கு அடிமைகளாக்கி வைத்திருந்தான். இயேசு சிலுவையில் மரித்ததால் நமது சாபங்களிலிருந்து நமக்கு விடுதலை உண்டானது (கலா. 3: 13) என்பதையும் அவரது தழும்புகளால் நாம் வியாதிகளிலிருந்து சுகமாக்கப்பட்டோம் என்பதையும் (1பேதுரு 2:24) அவரது இரத்தத்தினால் நாம் விலைக்கொடுத்து வாங்கப்பட்டோம் என்பதையும் (தி.ப.20:28) நம்ப முடியாதபடி வைத்திருந்தான். இத்தகைய அடிமை வாழ்விலிருந்தும் பிசாசின் பிடியிலிருந்தும் விடுதலைப்பெற்று நிலைவாழ்வை நோக்கி பயணிக்க வேண்டுமானால் நாம் புதிதாய் பிறந்தாக வேண்டும் (யோவா. 3:5).

புதிதாய் பிறப்பது என்பது மூன்று அனுபவங்களை உள்ளடக்கியதாகும். முதலாவது "கடவுளின் பார்வையில் நான் ஒரு பாவி" என்பதை நாம் ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆண்டவரின் அன்பை முழுமையாய் உணர்ந்து அனுபவிக்கும்பொழுதுதான் இந்த நிலையை எட்ட முடியும். இரண்டாவது இந்த பாவியை மீட்பதற்காகத் தான் இயேசு உலகிற்கு வந்து மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்பதை நம்ப வேண்டும். இயேசுவின் மரணமும் உயிர்ப்பும் ஏதோ ஒரு வரலாற்று நிகழ்வுமட்டுமல்ல, மாறாக அது நமக்குள் ஒரு மனமாற்றத்தை உண்டாக்கும் நிகழ்வாகும். மூன்றாவதாக, இன்றும் உயிருடன் வாழ்கின்ற இயேசுவிடம் நமது பாவங்களை அறிக்கைச்செய்து பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

முதல் இரண்டு அனுபவங்கள் இல்லாமல் இந்த மூன்றாவது அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. இந்த மூன்று அனுபவங்களையும் அனுபவிக்கிறவரே புதிதாய் பிறந்தவர் ஆவார். இதை நாம் ஒவ்வொருவரும் புத்தாண்டின் துவக்க நாளில் மட்டுமல்லாது,

ஒவ்வொரு நாளிலும் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இந்த அனுபவத்தில் இறுதிவரை நிலைத்திருப்பவரே, நிலை வாழ்வுக்குத் தகுதியுடையவர் ஆவார் (மத். 10:22) புதிதாய் பிறக்காமல் நிலை வாழ்வைக் காணமுடியாது நுழையவும் முடியாது.

**புதிதாய் பிறப்பதால் என்ன நன்மைகள்?**

புதிதாய் பிறப்பதால் நமது வாழ்க்கை முறை மாறுகிறது. நமது சிந்தனை மாறுகிறது. நமது செயல்கள் மாறுகிறது. நமது வாய் வார்த்தைகள் நமது பேச்சு மாறுகிறது. நமது நல்ல மாற்றம் பிறரையும் மாற்றத்திற்கு உள்ளாக்குகிறது. புதிதாய் பிறப்பதனால் ஒருவரையொருவர் அன்பு செய்து வாழும்வாழக்கைக்கு மாறுகிறோம். இருப்பவர் இல்லாதவரோடு பகிர்ந்து வாழும் வாழ்க்கையை வாழ விருப்புவர். வாழ்வில் இறைவனுக்கு முதலிடம் கொடுத்து இறைவனோடு நெருங்கிய உறவுடன் வாழ்கிறவர்களாய் காணப்படுவோம். இதுதான் இறையாட்சி என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில், “இறையாட்சி உங்களுக்குள்ளே செயல்படுகிறது” (லூக். 17:21) என்று இயேசு குறிப்பிட்டது இதைப்பற்றியே. புதிதாய் பிறந்தவர்களின் சிந்தையை தூய ஆவியர் ஆளுகை செய்வார் அதனால் அவர்கள், உண்மையானவை எவையோ, கண்ணியமானவை எவையோ, நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, நற்பண்புடையவை எவையோ, பாராட்டுக்குரியவை எவையோ, போற்றுதற்குரியவை எவையோ இவற்றையே சிந்திக்கிறவர்களாய் காணப்படுவர். இவர்களிடத்தில் மட்டுமே அமைதி அருளும் கடவுள் தங்குவார் (பிலிப். 4:8-9) என்று திருவிவிலியம் நமக்குக் கற்றுத்தருகின்றது.

புதிதாய் பிறந்த இவர்கள் கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் இருப்பர். அவர்கள் இருக்கும் இடத்தில் மகிழ்ச்சி இருக்கும், அவர்கள் இருக்கும் இடத்தில் மன அமைதி இருக்கும். அவர்கள் வாழும் இடங்களில் சண்டை சச்சரவுகள் இருக்காது. அவர்களது வாழ்க்கை பிறருக்கு சான்று பகர்கின்ற வாழ்க்கையாக இருக்கும். அவர்கள் செய்யும் ஒவ்வொரு செயல்களும் கடவுளுக்கு உகந்ததாய் இருப்பதனால் அச்செயல் கடவுளை மகிமைப்படுத்தும். மொத்தத்தில் ஒரு குட்டி பரலோகத்தையே இப்பூமியில் காணலாம். திருவிவிலியத்தில் ஒவ்வொரு வார்த்தைகளும் பரிசுத்த ஆவியாரின் ஏவுதலால் எழுதிக் கொடுக்கப்பட்டு, மனிதனை சீராக்குவதற்கும் நேர்மையாய் வாழ பயிற்றுவிப்பதற்கும் பயனள்ளது (2திமொ. 3:16). உயிருள்ள ஆற்றலுள்ள இந்த இறை வார்த்தைகளின்மீது ஆர்வம் உள்ளவர்களாய் இருப்பர். இறைவார்த்தைக்கு சான்று பகரும் வாழ்வை வாழ்வர். இதுதான் புதுவாழ்வின் பயன்கள்.

இப்படிப்பட்ட புதுவாழ்வுள்ளவர்களாய் நாம் இந்த புத்தாண்டில் நுழைய வேண்டுமென்று கடவுள் விரும்புகிறார். கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு ஆயத்தமாகிறோம், புத்தாண்டின் கொண்டாட்டங்களுக்கு

ஆய்தமாகிறோம். இப்புத்தாண்டில் புதிதாய் பிறப்பதற்கு ஆயத்தமாவோம், இறைவனின் ஆசி எந்நாளும் இருக்கும்.

## திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் ச.ச.,

### அயலவரை வரையறையின்றி மன்னிக்க அழைப்பு

கடவுளை அன்பு கூர்வது பற்றி, தன் டுவிட்டரில் செய்தி வெளியிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடவுளை அன்பு கூர்வது என்பது, முழுமனதுடன் நம் அயலவருக்குச் சேவை செய்வதாகும். மற்றும் வரையறையின்றி மன்னிக்க முயற்சிப்பதுமாகும் என்று விளக்கியுள்ளார். இலாபத்தை மையப்படுத்திய கலாச்சாரத்தில் உரிமைகளுக்கு இடமில்லை. சமுதாயத்தின் விளிம்பு நிலையிலிருக்கும் மக்களின் மனித மாண்பு பாதுகாக்கப்படுவதற்கு மனித உரிமைகளின் அனைத்துலக அறிக்கை உதவுகிறது என்று விளக்கியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### புனித பிரான்சிசின் அடிச்சுவட்டில் அபுதாபியில் திருத்தந்தையின் திருத்தூதுப் பயணம்

திருத்தந்தை பிரான்சிஸ்அவர்கள், 2019ம் ஆண்டு பிப்ரவரி 3ம் தேதி முதல் 5ம் தேதி முடிய, ஐக்கிய அரபு அமீரகத்தின் முக்கிய நகரான, அபு தாபியில் திருத்தூதுப் பயணம் மேற்கொள்வார் என்று, திருப்பீட செய்தித் தொடர்புத் தலைவர், கிரேக் புர்கே அவர்கள் அறிவித்தார். 2019ம் ஆண்டு பிப்ரவரி மாதம், அபு தாபியில் நடைபெறும் பன்னாட்டு பலசமயக் கூட்டத்தில் கலந்துக்கொள்வது, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மேற்கொள்ளும் திருத்தூதுப் பயணத்தின் முக்கிய நிகழ்வாக அமையும். அசிசி நகர் புனித பிரான்சிஸ் அவர்கள், அமைதி வேண்டி உருவாக்கிய புகழ்பெற்ற செபத்தின் ஒரு வரியான உமது அமைதியின் கருவியாக என்னை உருவாக்கும்" என்ற சொற்கள், இப்பயணத்தின் மையக்கருத்தாக வெளியிடப்பட்டுள்ளது. அரேபிய தீபகற்பத்திற்கு, ஒரு திருத்தந்தை மேற்கொள்ளும் முதல் திருத்தூதுப் பயணமாக இது அமைந்துள்ளது என்ற மகிழ்வைத் தெரிவித்த, ஆயர் ஹின்டெர் அவர்கள், முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் ஒருவரையொருவர் புரிந்துக்கொள்வதற்கு, இப்பயணம் மிகவும் உதவும் என்றார்.

### கிறிஸ்மஸ் மரம், குடில், கடவுளின் கனிவைத் தியானிப்பதற்கு உதவி

கிறிஸ்மஸ்சின் வியப்பூட்டும் அடையாளங்களாகிய, கிறிஸ்மஸ் மரமும், கிறிஸ்மஸ் குடிலும், நம் ஒவ்வொருவரோடும் நெருக்கமாக இருக்கும் பொருட்டு கடவுள் மனிதராகப் பிறந்த பேருண்மையையும் அவரின் ஒளியையும், கனிவையும் தியானிப்பதற்கு உதவுகின்றன என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார். இவ்வாண்டு வத்தின்கான் வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள இருபது மீட்டருக்கு அதிகமான உயரம் கொண்டுள்ள கிறிஸ்மஸ் மரம், தம் மகன் இயேசுவை இவ்வுலகில்

பிறக்கச் செய்த கடவுள், மனிதரை தன்னலம் மற்றும் பாவத்திலிருந்து விடுவித்து, தம்மிடம் ஈர்ப்பதன் அடையாளமாக உள்ளது என்றும், திருத்தந்தை தெரிவித்தார். கிறிஸ்மஸ் குடிலில் வைக்கப்பட்டுள்ள உருவங்கள். இத்தாலியின் வெனிஸ் நகருக்கருகிலுள்ள ***Jesolo*** கடற்கரை மணலாலானவை. 700 டன்கள் மணலால் அமைக்கப்பட்டுள்ள இந்த உருவங்களை, செக் குடியரசு, ஹாலந்து, ரஷ்யா, அமெரிக்க ஐக்கிய நாடு ஆகிய நாடுகளைச் சேர்ந்த நான்கு கலைஞர்கள் உருவாக்கினர்.

2019ம் ஆண்டு பிப்ரவரி 21ம் தேதி முதல் 24ம் தேதி முடிய, வத்திக்கானில் நடைபெறவிருக்கும் திருஅவையில் சிறார் பாதுகாப்பு குறித்த கூட்டத்திற்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தயாரிப்பு குழு ஒன்றை உருவாக்கினார். இது குறித்து அறிக்கை வெளியிட்ட கர்தினால் ***Sean O'Malley*** அவர்கள் இந்நடவடிக்கைக்கு திருத்தந்தைக்கு நன்றி தெரிவித்துள்ளதுடன், திருஅவையில் சிறார் பாதுகாப்பு குறித்த கூட்டத்திற்கு சிறார் பாதுகாப்பான திருப்பீட குழு பரிந்துரைத்தது என்றும், பின்னர் அப்பரிந்துரையை சி-9 கர்தினால்கள் அவை பரிசீலனை செய்தது என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் அதற்கு இசைவு தெரிவித்தார் என்றும் கூறியுள்ளார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நியமித்துள்ள தயாரிப்பு குழுவில், மும்பை பேராயர் கர்தினால் ஆசுவால்டு கிரேசியஸ் அவர்களும் ஒருவராவார்.

ஆசிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்பின் தலைவராக, மியான்மார் நாட்டு கர்தினால் சார்லஸ் மாங் போ அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதுவரை ஆசிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்பின் தலைவராக பணியாற்றிய மும்பை கர்தினால் ஆசுவால்டு கிரேசியஸ் அவர்கள், இவ்வாண்டு டிசம்பர் 31ம் தேதி தன் பணிக்காலத்தை நிறைவு செய்வதையடுத்து, 2019ம் ஆண்டு சனவரி 1ம் தேதி முதல், கர்தினால் போ அவர்கள் பொறுப்பேற்க உள்ளார். மியான்மார் நாட்டின் ***Monhla*** என்ற ஊரில், 1948ம் ஆண்டு பிறந்த போ அவர்கள், சலேசிய துறவு சபையில் சேர்ந்து, 1976ம் ஆண்டு தன் 28வது வயதில் அருள்பணியாளராக தன் பணிகளைத் துவக்கினார். 28 ஆசிய நாடுகளை உள்ளடக்கிய 19 ஆசிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பிற்கு, 2011ம் ஆண்டு முதல், தலைவராகப் பணியாற்றிய மும்பை பேராயர் கர்தினால் ஆசுவால்டு கிரேசியஸ் அவர்கள், இவ்வாண்டு டிசம்பர் 31ம் தேதி தன் பொறுப்புக்களை கர்தினால் போ அவர்களிடம் ஒப்படைக்கிறார். ***(Asia News)***

இந்தியாவின் கடப்பா மறைமாவட்டத்தின் ஆயர் பிரசாத் கலேலா அவர்கள், பணி ஓய்வு பெறுவதற்கு, அளித்த விண்ணப்பத்தை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார். 2008ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் கடப்பாவின் ஆயராக பணியாற்றி வந்துள்ள 56 வயது நிரம்பிய ஆயர் பிரசாத் அவர்கள் பணி ஓய்வு பெறுவதையடுத்து, கடப்பா மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க நிர்வாகியாக குண்டூரின் முன்னாள் ஆயர் காலி பாலி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

## சுடர் வாசகர் போட்டி - 54 சரியான விடைகள்

1. 1858ஆம் ஆண்டு மெசபியேல் மலைக்குகையில் சிறுமி பெர்னதெத்திடம் கூறினார்
2. புனித திருச்சிலுவை யோவான்
3. புனித யோவான், இடியைப் போன்றவர்
4. மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தன் வாழ்வையே இழப்பாரெனில் அவனுக்கு கிடைக்கும் பயன் என்ன? (மத்.16:26)
5. அருளாளர் பிலிப்பு ரெனால்டி
6. தூரின் பேராயர் கர்தினால், பீட்டரிடம் கூறியது
7. இயேசுவைக் காண வந்த ஞானிகள்
8. எசாயா. 9:2
9. புனித பிரான்சிஸ் சவேரியார்
10. பிறக்கப் போகும் குழந்தைகளின் பாதுகாவலி, அமெரிக்க கண்டத்தின் பாதுகாவலி
11. ஆண்டவரே இந்த பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதீர்கள்
12. புனித யோவான்
13. புனித பிரான்சிஸ் சவேரியார்
14. "அமைதிக்கு பணிபுரிவதாக இருக்க வேண்டும்"
15. கி.பி. 1922ஆம் ஆண்டு

**குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்**

***S. Gnanaprakasam, Chennai***

***S. Kulandai Teresa, Tuticorin***

***J. Kevin, Coimbatore***

## சுடர் வாசகர் போட்டி - 55

1. கீழ்த்திசை ஞானிகள் இயேசுவை காணவந்த நிகழ்ச்சி விவிலியத்தில் எங்கு உள்ளது?
2. இயேசு திருமுழுக்கு பெற்ற ஆற்றின் பெயர் என்ன?
3. புனித ஜோசப் வாஸ் எப்பொழுது யாரால் புனித நிலைக்கு உயர்த்தப்பட்டார்?
4. புனித லவுரா விக்குனாவின் உடல் எங்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது?
5. "ஆன்மாக்கள் மட்டும் போதும் வேறேதும் வேண்டாம்" கூறியது யார்?
6. "பணி மற்றும் தன்னடக்கம்" என்ற சங்கத்தை துவங்கியவர் யார்?
7. இவ்வாண்டு வத்திக்கானில் வைக்கப்பட்டுள்ள கிறிஸ்மஸ் மரம் எதன் அடையாளமாக இருப்பதாக திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகிறார்?
8. புனித சலேசியார், புனித ஜேன் தி ஷன்டாலின் துணையோடு உருவாக்கிய சபையின் பெயர் என்ன?
9. புனித குரியாக்கோஸ் எலியாஸ் சவேராவை புனிதர் நிலைக்கு உயர்த்திய திருத்தந்தை யார்?
10. ஆதாம் செய்த பாவத்தினால் நமக்கு வந்த பாவத்தின் பெயர் என்ன?
11. "சிலோன் திருத்தூதர்" என்று அழைக்கப்பட்டவர் யார்?
12. புனித லவுரா விக்குனா முதல் நற்கருணை பெரும் போது மனதில் எடுத்த வாக்குறுதி என்ன?
13. கல்லெறியப்பட்டு வீதிகளில் இழுத்தடிக்கப்பட்டு இறந்த வேதசாட்சி யார்?
14. தமிழர் கலாச்சாரத்தை பறைசாற்றும் விதமாக திருச்சபை கொண்டாடும் விழா எது?
15. அருளாளர் புரோனிஸ்லாஸ் நற்கருணை மற்றும் மரியன்னை பக்திகளுடன் இன்னும் எந்த பக்தியை ஏற்படுத்தினார்?

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஜனவரி 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று

பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

ஆண்டவரை காணிக்கையாக அர்ப்பணித்தல்
பொதுக்காலம் 4ம் ஞாயிறு
புனித அருளானந்தர்
புனித கொன்சாலோ கார்சியா
அருளாளர் யூசேபியா பாலோமினா ஏனெஸ்
பொதுக்காலம் 5ம் ஞாயிறு
புனித லூர்து அன்னை திருவிழா
புனித ஜூலியன்
புனிதர்கள் சிரில், தெதோடியஸ்
பொதுக்காலம் 6ம் ஞாயிறு
திருத்தூதர் பேதுருவின் தலைமைப்பீடம்
பொதுக்காலம் 7ம் ஞாயிறு
புனித லூயிஸ் வெர்சீலியா மற்றும் கலிஸ்துஸ் கரவாரியோ
வியாகுல அன்னையின் புனித கபிரியேல்

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

சிவகங்கை சிங்கம் புனித அருளானந்தர்
புனித லூர்தன்னை புகழ் பாடுவோம்
அருளாளர் யூசேபியா பாலோமினா ஏனெஸ்
திருச்சபை செய்திகள்


**தீபகச் சுடர்**

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:....................................
முகவரி:..................................
..........................................
..........................................
..........................................

## ஜனவரி மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | செ | கன்னிமரியாள் இறைவனின் தாய் பெருவிழா | *I.* எண். 6: 22-27<br>*II.* கலா. 4: 4-7 | லூக். 2: 16-21 |
| 2 | பு | புனித பேசில், நசியான் நகர் புனித கிரகோரி | 1யோவா. 2: 22-28 | யோவா. 1: 19-28 |
| 3 | வி | புனித குரியாகோஸ் எலியாஸ் சவரா | 1யோவா. 3: 29-3:6 | யோவா. 1: 43-51 |
| 4 | வெ | | 1யோவா. 3: 7-10 | யோவா. 1: 35-42 |
| 5 | ச | புனித ஜான் நியூமேன் | 1யோவா. 3: 11-21 | யோவா. 1: 43-51 |
| 6 | ஞா | ஆண்டவரின் திருக்காட்சி | *I.* எசா. 60: 1-6<br>*II.* எபே. 3: 2-3,5-6 | மத். 2: 1-12 |
| 7 | தி | | 1யோவா. 3:22-4:6 | மத். 4: 12-17,23-25 |
| 8 | செ | | 1யோவா. 4: 7-10 | மாற்கு 6: 34-44 |
| 9 | பு | | 1யோவா. 4:11-18 | மாற்கு 6: 45-55 |
| 10 | வி | | 1யோவா. 4: 19-5:4 | லூக். 4: 14-22 |
| 11 | வெ | | 1யோவா. 5: 5-13 | லூக். 5: 12-16 |
| 12 | ச | | 1யோவா. 5: 14-21 | யோவா. 3: 22-30 |
| 13 | ஞா | ஆண்டவரின் திருமுழுக்கு விழா | *I.* எசா. 60: 1-6<br>*II.* எபே. 3: 2-3,5-6 | லூக். 3: 15-16, 21-22 |
| 14 | தி | அருளாளர் தேவசகாயம் பிள்ளை / போகி | எபி. 1: 1-6 | மாற்கு 1: 14-20 |
| 15 | செ | புனித வனத்துச் சின்னப்பர் / பொங்கல் திருநாள் | எபி. 2: 5-12 | மாற்கு 1: 21-28 |
| 16 | பு | புனித ஜோசப் வாஸ் / திருவள்ளுவர் தினம் | எபி. 2: 14-18 | மாற்கு 1: 29-39 |
| 17 | வி | புனித அந்தோணியார் / உழவர் திருநாள் | எபி. 3: 7-14 | மாற்கு 1: 40-45 |
| 18 | வெ | புனித எமிலி | எபி. 4: 1-5,11 | மாற்கு 2: 1-12 |
| 19 | ச | | எபி. 4: 12-16 | மாற்கு 2: 13-17 |
| 20 | ஞா | பொதுக்காலம் இரண்டாம் ஞாயிறு | *I.* எசா. 62: 1-5<br>*II.* 1கொரி. 12: 4-11 | யோவா. 2: 1-11 |
| 21 | தி | புனித ஆக்னஸ் | எபி. 5: 1-10 | மாற்கு 2: 18-22 |
| 22 | செ | புனித வின்செண்ட் பல்லோட்டி | எபி. 6: 10-20 | மாற்கு 2: 23-28 |
| 23 | பு | | எபி. 7: 1-3,15-17 | மாற்கு 3: 1-6 |
| 24 | வி | புனித பிரான்சிஸ் சலேசியார் | எபி. 7: 25-8:6 | மாற்கு 3: 7-12 |
| 25 | வெ | திருத்தூதர் பவுல் மனமாற்றம் | தி.பணி.22:3-16 | மாற்கு 16: 15-18 |
| 26 | ச | புனித திமொத்தேயு, தீத்து | 2திமொ. 1: 1-8 | லூக். 10: 1-9 |
| 27 | ஞா | பொதுக்காலம் மூன்றாம் ஞாயிறு | *I.* நெகே. 8: 2-4, 5-6,8-10<br>*II.* 1கொரி. 12: 4-11 | லூக். 1: 1-4, 4:14-21 |
| 28 | தி | அக்குயினோ நகர் புனித தாமஸ் | எபி. 9: 15,24-28 | மாற்கு 2: 22-30 |
| 29 | செ | | எபி. 10: 1-10 | மாற்கு 3: 31-35 |
| 30 | பு | | எபி. 10: 11-18 | மாற்கு 4: 1-20 |
| 31 | வி | புனித தொன் போஸ்கோ | எபி. 10: 19-25 | மாற்கு 4: 21-25 |